தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி 1 | தி. பி. 2013 நளி 19 (5 - 12 - 1982) விலை 65 காசு | இதழ் எண் : 5 | பகுதி 5

★ உலகில் பரவிய தமிழினம், ஆங்காங்கே மொழியால் இனத்தால் திரிபடைந்து விட்டது!

★ தமிழினத்திற்கு வெளியழிவைவிட உள்ளழிவே மிகுதி !

★ அந்த உள்ளழிவு - உள் வீழ்ச்சி, நம் சாதி, மத வேறுபாடுகளால் ஏற்படுவது !

மொழி, இனம், நாடு!

மொழி, இனம், நாடு—உயர்
முன்னேற்றம் தேடு !—பெரும்
பழியறியாத் தமிழர்புகழ்
பண்ணமைத்துப் பாடு ! (மொழி)

அழிவு செய்யும் தீமைகளை
ஆழப்புதைப் போமே !—நன்மை
சூழவிதைப் போமே !
இழிவு கூறும் சாதிமத
இன்னல் அழிப்போமே !—சூழும்
இடர்கள் ஒழிப் போமே ! (மொழி)

பொதுமை நலம் பூத்திட—ஓர்
புரட்சி காணுவோமே !—பெரும்
புதுமை பூணுவோமே !
புதுமை வளம் அறிவுபெருக
போக்கை மாற்றுவோமே !—சம
நோக்கை ஏற்றுவோமே ! (மொழி)

நலிவு சேர்க்கும் மடமைகளை
நடுவில் வைத்துக் கொளுத்துவோம்—நல
லறிவை நாளும் வழுத்துவோம் !
வலிவுதேக்கும் தாயமைத்தமிழை
வாழ வைத்துப் போற்றுவோம் !—நம்
வாழ்வில் ஒளியை ஏற்றுவோம்! (மொழி)

பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

✵ ஓர் இனம் முதலில் உரிமைக்காகவே போராட வேண்டும் ; அதன் பின்னர்தான் வாழ்க்கைக்காகப் போராட வேண்டும் !

✵ தமிழ்நிலம் வெளியீட்டு விழாவில் பாவலரேறு தொடருரை !

சென்னை நவம்: 28 — உ. த, மு. க. செய்தி யிதழாகிய 'தமிழ் நிலம்' வெளியீட்டு விழாவில் பாவலரேறு ஆற்றிய உரையின் தொடர்ச்சி வருமாறு :

அத்தனையிலும் இன்னமும் அந்த இனம் அப்படியே வாழ்ந்து கொண்டிருக்கிறதா என்று கேட்டார்கள்! இல்லை ; அவற்றிலே ஏறத்தாழ 12 அல்லது 13 நாடுகளிலேதான் தமிழ் என்கின்ற பெயரோடும், தமிழர் என்கின்ற பெயரோடும் இந்த இனம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. மற்ற நாடுகளிலே மற்ற நிலைகளிலே மொழியும் திரிந்துவிட்டது. இனமும் திரிந்துவிட்டது. எனவே, படிப்படியாக மிகப் பரவிய இந்த இனம், படிப்படியாக ஒவ்வோர் இடத்திலிருந்தும் மறைந்துக் கொண்டே வருகின்றது. எல்லா இனங்களைப் போலவும் இந்த இனம் இல்லை ! உலகம் முழுவதும் பரந்துபட்டு வாழ்ந்து வருகின்ற பெரிய 'உயிர்ப்பு இனம்' வரலாற்றுச் சிறப்புடைய இனம், இந்தத் தலைமுறையிலும் அழிந்து கொண்டு வருகின்றது என்று சொன்னால், அஃது இந்த இனத்திற்கு வெளி அழிவு இல்லை ; உள்ளழிவு தான் இருக்கிறது. என்பதே பொருள். இந்த உள்ளழிவு இருக்கின்றது என்ற அந்தத் தன்மையை,—உண்மையைத்—திருக்குறளிலே, ஏறத்தாழ 2300 ஆண்டுகளுக்கு முன்பே அவர் குறிப்பாகச் சுட்டியிருக்கின்றார் ! அஃதாவது, நீங்கள் இந்தக் குறளைச் சொன்னவுடன் தான் அந்தச் சொல்லுக்கு உண்மையான பொருள் என்னவென்று உங்களுக்குத் தெரியும் ! குடிமை என்ற அதிகாரத்திலே, ''வழங்குவது உள் வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி பண்பில் தலைப் பிரிதல் இன்று'' என்று சொல்லுவார். அஃதாவது பழங்குடி என்கின்ற அந்தச் சொல்லுக்குப் பரிமேலழகர் தமிழ்க் குடி என்பார், அந்தத் தமிழ்க் குடியைத் தான் அது குறிப்பிடுகின்றது என்று சொல்லுவார், அந்தத் தமிழ்க்குடிக்கு என்ன வீழ்ச்சி ஏற்பட்டது என்று சொன்னால், உள்வீழ்ச்சி ஏற்பட்டது என்று அந்தக் குறளிலே சொல்லப் பெற்றுள்ளது. ''வழங்குவது உள் வீழ்ந்தக் கண்ணும்'' உள் வீழ்தல் என்பது, ஏழ்மையாகப் போன பின்னாலே என்கின்ற ஒரு நிலையினை நாம் பொருளாகக் கொள்ள வேண்டிய தேவையில்லை ! உள்வீழ்ச்சி ஏற்பட்டு விட்டது. புறவீழ்ச்சிஎன்பது தமிழினத்தை வரலாற்று அடிப்படையிலே மிகப் பிந்தித் தாக்கிய ஒரு வீழ்ச்சி ! முதலில் இங்கே ஏற்பட்டது உள் வீழ்ச்சி. அந்த உள்வீழ்ச்சி இங்கே எப்படி ஏற்பட்டது என்று சொன்னால், இந்த நாட்டிற்கு வந்தவர்கள் முதல முதலாக உள்நிலையிலே நமக்குப் பகையை உருவாக்கினார்கள் ! நாம் ஒருவருக்கு ஒருவர் பொருதிக் கொள்ளுகின்ற வகையிலே, வீழ்த்திக் கொள்ளுகின்ற வகையிலே, ஒருவரையொருவர் அழிக்கின்ற வகையிலே அந்த நிலை தொடக்கத்திலே தூண்டி விடப்பட்டது.

(8-ஆம் பக்கம் பார்க்க)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய எழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

உங்கள் மடல்கள்

● இந்திய வல்லாளுமை அரசை எதிர்த்து எழுச்சிக்கும் விடுதலைக்கும் முழக்கமிட்டுத் தொண்டாற்றி வரும் தங்களின் பெரிய தலைமையில் இயங்கும் உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடாம் ''தமிழ் நிலம்'' நிலக்கிழமையையும், முதலாளியத்தையும், பார்ப்பனியத்தையும் ஒருசேரத் தாக்கி அழிக்க வேண்டும். தோழமையுள்ள,

—பெரியார் பித்தன், ஊற்றங்கரை.

○ தமிழினத்தையும் தமிழ் மொழியையும் காக்க வந்த தமிழினத்தின் விடிவெள்ளியே ! இன்றைய தமிழகத்தின் அரசியல் இயக்கங்கள் எங்கோ திசைமாறிச் செல்கின்றன. இதனால் எதிர்காலத்தில் தமிழர்களுக்கு அவை பயனற்றுப் போகும் என்று திட்டவட்டமாக கூறலாம். இந்நிலையில் தங்கள் உ. த, மு. க. வினால் தான் தமிழகத்தை இந்திக்காரர்களிடமிருந்து காப்பாற்ற முடியும். தமிழ் நாட்டை விட மக்கள் தொகையில் மிக மிகக் குறைந்தும் பரப்பளவில் குறுகியும் இயற்கை வளங்களில் குன்றியும் உள்ள உரிமை பெற்ற நாடுகள் உலகில் எத்தனையோ இருக்கின்றன. ஆனால் நாமோ வடவர்க்கு அடிமையாகவே இருக்கிறோம். இந்நிலையில் இளைஞர்களே —தமிழர்களே—ஒன்று சேர்த்துப் போராடுங்கள். வெற்றி நம்முடையதே !

—கும. கதிர்வேலன், பொன்னமராவதி.

○ தமிழ் நிலத்தில் மண்டிக் கிடக்கும் மடமைக் காளான்களைக் கிள்ளி எறிய 'தமிழ் நிலம்' உலா வருவதுகண்டு, பெருமை அடைகின்றேன். தமிழ் மான மீட்புப் பணிக்குக் கேடயமாக — வாளாகப் புறப்பட்டிருக்கும் 'தமிழ் நிலம்' தழையட்டுமே!

—இரா. கண்ணிமை, மொரப்பூர்.

○ 'தமிழ் நிலம்' கிழமையிதழ் வெளியிடுவதையறிந்து மிக்க மகிழ்ச்சி. பாவலரேறு ஐயா அவர்கள் இதுவரை ஆற்றிய பணியைவிட இனி ஆற்றப்போகும் பணியே தலையாய தமிழ் ;வரலாற்றுச் சிறப்புடையதாகும். அவரின் தூய தமிழ்த் தொண்டு சிறந்தோங்க என்னுடைய ஒத்துழைப்பும் பெர்லின் வாழ் தமிழர்களின் ஒத்துழைப்பும் வாழ்த்தும் என்றும் உண்டு.

—பெ. மணிசேகரன், பெர்லின் (மேற்கு ஜெருமணி)

○ செய்தியறிந்து மட்டற்ற மகிழ்வு கொண்டேன் தங்கள் ஆழமிகு அறிவுக் கருத்துகள் இந்நாள் வரை தொடர்புடைய தென்மொழியன்பர்கள் வரையிருந்து, இன்று 'தமிழ் நிலம்' என்னும் கிழமையிதழாக மலர்ந்து, பல் மணம் பரப்பி இன்னும் ஆயிரமாயிரம் இளைஞர்களின் நெஞ்சில் தமிழ்மொழி, இன, நாட்டு உணர்வுத் தீயினை உருவாக்கும் என்றே கருதுகின்றேன். அவ்வுணர்வுத் தீயானது உலகமெலாம் பரவித் தமிழ், இன, மொழிப் பகைவர்களைக் கருக்கித் தன்மானமுள்ள தமிழ்க் குமுகாயத்தையும் தகைமையுடைய தமிழ்நாட்டின் அரசையும் உருவாக்கும் என்றே எண்ணுகிறேன். தங்கள் தகைசால் தமிழ்ப் பணியால் 'தமிழ்நிலம்' கிழமை இதழாக நில்லாது நாளேடாகவும் விரிந்து தமிழ் நிலத்தைத் தமிழனுக்கே உரித்தாக்கும் என்றே கருதுகிறேன். தங்களின் இப்பணி தொய்வு கொள்ளாது தொடர்ந்து புதிய தமிழகத்தை உருவாக்க ஆயிரமாயிரம் தமிழ் இளைஞர்கள் தங்கட்கு என்றும் துணையாக நிற்பார்கள்.

—சா. தங்கராசு, க.மு. குவாகம்.

○ 'தமிழ் நிலம்' வெளியீடு எம்மையும் எமது இயக்கத்தினரையும் பெருமகிழ்ச்சிக்குள்ளாக்கியது. தமிழ் நிலத்தின் வளர்ச்சிக்கு எம்மாலானமுடிந்த அளவுப் பணிகளைப் புரிவதாகத் தங்களுக்கு உறுதியளிக்கிறேன். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 'தமிழ் நிலம்' பெரும் பங்கைத் தாங்க வேண்டும் என்று வேண்டி, எமது மனநிறைவான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—உமாகாந்தன், ஆசிரியர் 'தமிழ்.முரசு', பிரான்சு.

○ உ. த. மு. க. செய்தியிதழாகத் 'தமிழ் நிலம்' கிழமையிதழ் வெளிவருவதையறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இந்த இதழின் வளர்ச்சிக்கு என்னால் இயன்ற உதவிகளைச் செய்து கொண்டிருப்பேன்.

—க. தியாகேசுவரன், பிரான்சு.

○ 'தமிழ் நில'த்திற்காகத் தொண்டாற்ற என்றும் கடமைப்பட்டுள்ளோம். எல்லா வகையிலும் எம்மாலியன்ற பாடாற்ற அணியமாக உள்ளோம். நன்றி.

—பாவலர் காசிதாசன், கோலாலம்பூர், மலேசியா.

● கழக வளர்ச்சி கண்டு மகிழ்ந்தோம், 'தமிழ் நிலம்' கிழமையிதழ் வெளியிடுவதை அறிந்து மட்டற்ற மகிழ்வு கொண்டோம். எங்களின் நல்வாழ்த்துகள். 'தமிழ் நிலம்' தமிழநில விடுதலைக்குத் தமிழர்களை அணியமாக்கும் என்னும் நம்பிக்கையால் நாங்கள் எல்லாம் மகிழ்ந்து கூத்தாடுகின்றோம். தங்களின் முயற்சிக்கு எங்களின் பங்கு என்றும் உண்டு.

—முரு. குழ. வீரசிங்கம், இலண்டன்.

★ தமிழ்நிலம் கிழமையிதழ் வெளிவருவது கண்டு மகிழ்ச்சி. உலகிலேயே முதல் முதலில் தூய தமிழில் வெளிவரவிருக்கும் இக் கிழமை யிதழ் இன, நாட்டு வீடுதலைக்கு முதல்படியாக அமைந்துள்ளது.

—முகுந்தன், தமிழீழ மக்கள் விடுதலை கழகம், சென்னை.

● தமிழ், தமிழினம், தமிழ்நாடு இவற்றின் மேம்பாட்டிற்கு வழிகோலும் 'தமிழ் நிலம்' கிழமையிதழ் தொடங்குவது கண்டு உள்ளம் உவகை கொண்டது. இவ்விதழ் சிறப்பாக அமையவும் வளர்ச்சியடையவும் என்னுடைய முழு உழைப்பையும் துணையையும் ஈடுகொடுக்க உள்ளவன் என்ற உறுதியையும் கூறுகின்றேன்.

— புல்வர். ந. அ. அண்ணாமலை, ஆலங்காயம்.

★ 'தமிழ் நிலம்' என்னும் பெயரில் உ. த. மு. க. செய்தியிதழ் வெளியிடவிருப்பது அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்...என்னால் இயன்றளவு ஒத்துழைப்பேன் என்பதை இம்மடல் வழி மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

— நாரண. திருவிடச் செல்வன், கூலிம், கெடா,

★ 'தமிழ் நிலம்' முகிழ்த்தலர்தல் கண்டு பேருவகை கொள்கின்றேன். தமிழ்நிலம் சிறந்து செழித்து என்றும் வளம் பெற நிறையன்பால் வாழ்த்துகிறேன்.

—பாவலர். சா. சி. சுப்பையா, ஈப்போ.

○ எங்கள் இனிய அன்பு நெஞ்சம் அவர்களுக்கு வணக்கம். 'தமிழ் நிலம்' கிழமையிதழ் உ. த. மு. க. வின் செய்தி இதழாக வெளிவர யிருப்பதை அறிந்து மெத்தவும் மகிழ்ச்சி அடைகிறேன், தமிழின முன்னேற்றத்திற்காக நீங்கள் ஆற்றும் பணிகளுக்கு எங்கள் முழு ஒத்துழைப்பை உறுதி கூறுகின்றேன்.

—எம் ஏ. சாமி வெரித்தாசு வானொலி, மணிலா, பிலிப்பைன்சு:

(7-ஆம் பக்கம் பார்க்கவும்)

ஈழத்திற்கோர் இலக்கியப் பாலம்

காந்தளகம்

72, அய்யாவு வீதி. சென்னை 600 030

	ரூ. காசு
எனது யாழ்ப்பாணமே (சச்சிதானந்தன்)	10 — 00
காசி ஆனந்தன் கவிதைகள்	10 — 00
மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது	8 — 50
1982இல் தமிழீழம்	3 — 00
தமிழியற் சிந்தனை (வித்தியானந்தன்)	12 — 00
தமிழர் பண்பாடும் அதன் சிறப்பியல்புகளும் (தனிநாயகம் அடிகள்)	2 — 50
தோட்டக் காட்டினிலே (சிறு கதைகள்)	7 — 50
Reign of Terror in Jaffna	8 — 00
The Plight of Hindu Society in SriLanka	3 — 50
Non-violence and Tamil Liberation	1 — 50

மற்றும் இலங்கையின் சமய நூல்கள், வீரகேசரி நாவல்கள் கிடைக்கும். நூல்களின் விலையைப் பண விடையில் அனுப்பினால் அஞ்சல் செலவு இலவசம்.

விளம்/1/ஆற்றல்.

பழம்பெரும் அறிஞர், புதினச்சிற்பி, நாரணதுரைக்கண்ணன் அவர்களின் அன்பு வாழ்த்து!

பேரன்புமிக்க நண்பர் அவர்களுக்கு,

வாழிய நலம்

தாங்கள் 'தமிழ் நிலம்' என்னும் கிழமை இதழ் ஒன்றை வெளியிட்டு வருவதறிந்து மிகவும் மகிழ்ச்சியுற்றேன்.

தாய் மொழி தமிழைப் பிறமொழி கலவாமல் தூய்மைப்படுத்தி வளப்படுத்தவும், நம் தமிழினத்தைப் - பலவகைச் சழக்குகளாலும் தாழ்வுற்றிருக்கும் நமிழினத்தாரை நிமிரவைத்துப் பல துறைகளிலும் மேம்பாடு அடையச் செய்யவும் தாங்கள் நீண்ட நெடுங்காலமாக முயற்சி செய்து வருகிறீர்கள் என்பதைத் தமிழகம் மட்டுமன்று, தமிழ் வழங்கும் இலங்கை, மலேசியா முதலிய பிற நாடுகளும் அறியும்.

மொழியைத் தூய்மைப் படுத்தும் குறிக்கோளில் தாங்கள் பெரிதும் வெற்றி கண்டு விட்டீர்கள் என்றே நான் சொல்வேன்.

அடுத்து, தமிழினத்தைப் புத்துலக இயக்கத்துக்கு ஏற்றவாறு, உயர்வடையச் செய்யும் பணியில் ஓராண்டுக்கு மேலாகவே ஊக்கமாய் இருந்து வருகிறீர்கள். அதற்குச் சான்றாக, 'உலகத் தமிழின முன்னேற்றக்கழகம்' இயங்கி வருகிறது; அறி வேன்.

இக்கழகத்தின் வாயிலாக நம் தமிழ மக்களை விழிப்புற வைப்பதில் பெரிதும் ஈடுபட்டிருக்கும் தாங்கள், அதற்குரிய ஒட்பற்ற போர்க் கருவியாகத் ''தமிழ் நிலம்'' இதழைத் தொடங்கியிருப்பது தமிழர் நலம் நாடும் அனைவராலும் உளமார வரவேற்கப்படத் தக்கதாகும்.

'தமிழ் நிலம்' உண்மையான தமிழர்களின் பேராதரவை விரைவில் பெறும் என்று நான் நம்புகிறேன்.

''தமிழ் நிலம்'' ''தென்மொழி''யைப் போலவே செல்வாக்குடன் வளர வேண்டும்; தமிழ்மக்களின் பேராதரவைப் பெற்று வளம் பெற வேண்டும் என்று பெரிதும் விரும்பி என் நல்வாழ்த்தை வழங்குகின்றேன். தங்களின் அனைத்து நன் முயற்சிகளும் வெற்றி பெறுவதாக.

தாங்கள் என்பால் பேரன்புகொண்டு 'தமிழ் நிலம்' இதழை அனுப்பி வருவதற்குப் பெரு நன்றியுடையவனாயிருப்பேன்.

அகவை முதிர்ச்சியால் மட்டுமல்லாமல், அடுத்தடுத்து என்னைப் பீடித்து வரும் நோய் நலிவுகளாலும் தளர்ந்துபோய், வெளி நடமாட்டமில்லாமல் செயலற்றிருக்கும் எனக்குத் 'தென்மொழி'யுடன் 'தமிழ் நிலமு'ம் உணர்ச்சியையும் ஊக்கத்தையும் தந்து வருகிறது.

அன்புள்ள,

நாரணதுரைக்கண்ணன்

சென்னை—94

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும் !
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல். இல்லை,என் உடலும்;
எனவே • சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி 1 | 5-12-82—இதழ் எண்: 5 | பகுதி 5

ஆளுக்கு ஒரு குரல்!

அசாமில் தங்கள் இன நலத்தைப் பாதுகாத்துக் கொள்ள கடந்த மூன்று நான்காண்டுகளாகவே, கடுமையான பொதுமக்கள் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர், அசாமியர். அண்மையில் பஞ்சாபியரும் தங்கள் இனநலப் போராட்டத்தைத் தொடங்கித் தங்களுடைய நயமான கோரிக்கைகள் நிறைவேறும் வரையில் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதெனத் தீர்மானம் செய்துள்ளனர்.

தமிழினத்தின் போராட்டமும் அத்தகைய இனநலக் கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டதே!

தமிழ் மக்கள், இந்தியத் தேசியம், ஒருமைப்பாடு என்னும் பெயரால் மூன்றாந்தரக் குடிமக்களாகக் கருதப்படுவதனின்றும் தங்களை ஈடேற்றிக் கொள்ளுதல் வேண்டும்.

இந்தித் திணிப்பால், தமிழ் மொழியின் தேவையும், இன்றியமையாமையும் குறைக்கப்பட்டு, அது தொடர்பான மரபுச் சிறப்புகள், பண்பாட்டு நலன்கள் ஆகியவை பின்னுக்குத் தள்ளப்பட்டுப் படிப்படியாகச் சிதைக்கப்படுவது தடுக்கப் பெறுதல் வேண்டும். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், ஆங்கிலம் உலகத் தொடர்பு மொழியாகவும், தமிழ், கல்வி, ஆட்சி, அலுவல், சட்டமொழியாகவும் முழு வளர்ச்சிப் பெற, முழு வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். தமிழ்வழிக் கற்பிக்கவும், தமிழ் மொழியிற் கல்வி கற்றால் அரசுப் பணிக்கு உறுதி வாய்ப்பும் இங்குத் திட்ட வட்டமாகச் செயற்படுதல் வேண்டும். ஆங்கிலம் துணைமொழியாக நிலைப்படுத்தப் பெறுதல் வேண்டும். இந்தி முதலிய மொழிகள் அயல் மொழிகளாகவே கருதப்பெற்று, விருப்பமுள்ளவர்கள், அவற்றைத் தங்கள் சார்பில், தனியாகவே படித்துக் கொள்ள வேண்டும் என்னும் நிலை தமிழகத்தில் உருவாக வேண்டும். இந்தி படித்தால் அதற்கு எவ்வகைத் தனி அரசு மதிப்பும், வாய்ப்பும் தரப்பெறுமல், அந்நிலை, ஒருவரின் தனி வாழ்க்கை நிலைகளைப் பொறுத்ததாகவே ஆக்கப் பெறுதல் வேண்டும்.

தமிழ் நாட்டில், அயல் மாநிலத்தவர் வந்து, வீடு, மனைகள், தோட்டம் துரவுகள், தொழிலாளுமைகள், அரசுப் பதவி, அதிகார ஆளுமைகள் இவற்றைக் கைப்பற்றி, இங்குள்ள தமிழர்க்குள்ள வாய்ப்பு, வசதிகள், தொழில். அதிகார ஆளுமைகளைத் தடை செய்யும் போக்கு, தடுக்கப் பெறவும் தவிர்க்கப் பெறவும் வேண்டும்.

ஆட்சியதிகார நிலைகளில், மாநில அரசின் கைகளை வலுவிழக்கச் செய்யும் நடுவணரசுச் சட்டப் போக்குகள் தடுத்து நிறுத்தப் பெறல் வேண்டும்.

ஏற்கனவே, இங்கு நலிவு பெற்றுள்ள தமிழ் தேசிய மரபு நிலைகள் வலுப் பெற்று. இங்குள்ள, மொழி, பண்பாடு, கலை, இலக்கிய, நாகரிகத் தனிமை நிலைகள் சிதைவுற்றுச் சீரழியாமல் காக்கப் பெறுதல் வேண்டும்.

இவையன்றி, மதத்தாலும், சாதியாலும் தமிழ் நிலத்தில் நீண்ட நெடுங்காலமாகவே இங்குள்ள தமிழ் மக்களை, மேலாளுமை செய்யும் இந்துமதக் கோட்பாடும், பார்ப்பனீயக் கொடுமைகளும், இன நிலையில் தடுத்து நிறுத்தப் பெற்றுத் தவிர்த்தொழிக்கப் பெறுதல் வேண்டும்.

இங்குள்ள தமிழர்களுக்கென ஏற்கனவே இருந்த பரம்பரை மரந்த உரிமைகளும் நலன்களும் மீட்கப் பெற்றுத் தமிழினம் தன்னைத் தானே ஈடேற்றிக் கொள்ளவும் உலக அரங்கில் தன்னை மிக நாகரிகமுற்று முன்னேறிய இனமாக நிலைநிறுத்திக் கொள்ளவும் போதுமான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இடைக் காலத்தில் தமிழகத்துடன் இணைந்திருந்து, ஏதோ ஓர் அடிப்படையில், ஆட்சி வசதிக்கென்று, அண்டை அயல் மாநில எல்லைப் பகுதிகளுடன் இணைக்கப் பெற்ற, சிக்கலுக்குரிய தமிழ்நில எல்லைப் பகுதிகளை, மீண்டும் தமிழகத்துடன். இணைத்தல் வேண்டும்.

காவிரிநீர்ச் சிக்கலில், 1924 - ஆண்டு ஒப்பந்தம், புதுப்பிக்கப் பெற்று, உறுதி செய்யப் பெறுதல் வேண்டும்.

இவ்வாறான கோரிக்கைகளையும் இன்னோரன்ன வேறு சில கோரிக்கைகளையும் முன்வைத்து, இங்குள்ள தமிழர்கள் அசாமியரைப் போலும், பஞ்சாபியரைப் போலும் எழுந்து நின்று முனைந்து போராடினால் தவிர, எதிர்காலத் தமிழகமும், தமிழர்களும், மீண்டும் மீண்டும் பின்னுக்குத் தள்ளப்பட்டுத், தங்களுக்கென்று எந்தத் தனிப்பட்ட சிறப்பும் அற்றவர்களாகி, என்றென்றும், இந்தியத்திற்கும் ஆரியத்திற்குமே அடிமைப்பட்டுப் போவார்கள் என்பது கல்லின் மேல் எழுதிய உண்மையாகும்.

ஆனால், இந்நிலைகளைப் பற்றியெல்லாம் தீவிரமாகச் சிந்தியாது, இங்குள்ள தமிழினத் தலைவர்கள், வேறு எவை எவை பற்றியோ சிந்திப்பதும், இங்குள்ள அரசியல், ஆரிய இயல் நிலைகளுக்கு ஏற்ப, ஆட்சியதிகாரங்களைக் கைப்பற்றவும், மத, சாதி, வல்லாளுமைகளில் தங்களை மூழ்கடித்துக் கொள்ளவுமான பல நிலைகளிலேயே எண்ணுவதும் இயங்குவதுமாகத் தங்களுக்கென்று அமைந்த கட்சிகளையும், பொருள், கருவி, காரணங்களையும் தம் தம் சாய்கால்களையும் ஈடுபடுத்திக் கொண்டு, நாளுக்கு நாள், தேர்தலுக்கு தேர்தல், பொது மக்களை ஏமாற்றி, மேலும் மேலும் தங்கள் பொருள் நலம், புகழ் நலங்களில் ஆழ வேரூன்றி வருகின்றனர். இந்நிலைகளைப் பற்றியும், இவர்கள் இயக்கங்களைப் பற்றியும் அவற்றின் நெளிவு சுழிவுகளை, உயர்வு இழிவுகளைப் பற்றியும், ஒன்றுமறியாத தமிழ் மக்கள் அன்றாடம் தங்களுக்கு ஏற்பட்டு வரும் அறிவு. மனநலப் பாழடிப்புகட்கு ஆட்பட்டு நிலைகுலைந்து வருகின்றனர்.

அந்நிலைகளையெல்லாம், மேலும் தங்களுக்கு வாய்த்த நல்வாய்ப்பாகக் கருதிக் கொண்ட நம் தலைவர்கள், நாளுக்கொரு கொள்கையை, ஆளுக்கு ஒரு குரலில் முழங்கித் தங்கள் நல, புலங்களில், எந்த நொடியும் ஓர் எள்ளின் மூக்கும் குறையாமல், சட்ட, திட்ட, அறமன்ற நடவடிக்கைகளால் தங்களுக்குக் காப்பேற்படுத்திக் கொண்டு, தமிழக வரலாற்றையே குழப்பிக் குழப்பிச் சேறுக்கி வருகின்றனர்.

இங்குள்ள ஆளுங்கட்சி அமைச்சர்களும், எட்டுத் திசையிலும் கட்டிய எட்டு முரட்டுக் குதிரைகளைப் போல் ஆட்சித் தேரை, ஆளுக்கொரு பக்கம் இழுத்து, ஆளுமை நலன்களை அக்குவேறு ஆணி வேறாகச் சிதைத்துச் சீரழிக்கின்றனர். இவ்வாறான கட்சிப் போராட்ட நெரிசல்களுக்கிடையில், ஏதுமறியா எந்தமிழ்த் தாயினம், சிக்கிச், சேறுகச் சதக்குப் புதக்கென்று மிதிபட்டுக் குழைந்தும் குலைந்தும் வருகிறது.

இவற்றுக்கெல்லாம் ஒரு முடிவு வேண்டாமா? மக்கள் தாம் சிந்திக்க வேண்டும். நம் போன்றவர்கள் அத்தகைய சிந்தனைகளை மேலும் மேலும். நாளும் வளர்க்க வேண்டும்; வளர்த்துக் கொண்டே இருக்க வேண்டும். இருள் ஒரு நாள் கலையாதா? விடிவு ஒரு நாள் தொடங்காதா? போராட்ட வெயில் அடிக்காதா? புரட்சிக் கதிர் கொளுத்தாதா? அதற்கு முன் முறையான, ஏமாற்றமில்லாத, நேர்மையான மிக விளக்கமுள்ள, கருத்துப் புரட்சிக்கே இளைஞர்களின் கால்கள் நடையிட வேண்டும்; கைகள் இணைந்து கொள்ளுதல் வேண்டும்! அக் காலும் கையும் வாய்ந்த இளைஞர்கள் எங்கே? முதலில் அவர்களைக் கண்டுபிடித்து ஆற்றுப்படுத்துங்கள், தோழர்களே! ஆற்றுப் படுத்துங்கள்!!

சமசுக்கிருதந்தான் கோயில் வழிபாட்டுக்குப் பொருத்தமாம்! தமிழ் பொருத்தமில்லையாம்! புலவர் கிரன் முழங்குகிறர்!

கோயில் கருவறைகளில் தமிழ் வழிபாடு தொடர்பாக அரசு எடுத்த முயற்சியும், அதற்கு எதிரான நிலையில் பார்ப்பன ஆர்ப்பாட்டங்களும், கண்டிக்கும் சுவரொட்டிகளும், கூட்டங்களும் சில நாட்களாக மிகுதியாவதை நாம் கண்டு வருகிறோம்.

அண்மையில் மதுரையில் நடந்த கோயில் வழிபாட்டுகளினின்று படிப்படியாகச் சமற்கிருத நீக்கத்தை எதிர்த்து ஒரு கூட்டத்தில் புலவர் கிரன் என்கிற புராணச் சொற்பொழிவாளர் மிகவும் பதை பதைப்புடன் கீழ் வரும் கருத்தைக் கூறியுள்ளார்.

"ஆயிரமாண்டுகளுக்கு மேல் கோயில்களில் பயன்படுத்திய ஆற்றலுள்ள சமற்கிருதச் சிறப்புள்ள மந்திரங்களைப் புறக்கணிப்பது இடையூறு அளிப்பதாகும்.

தேவாரம், திருவாசகம், திவ்வியப்பிரபந்தங்கள் மக்களின் முன் கட்டாயம் பாடக் கூடியவைதாம். ஆனால் அவை கருவறைக்குள் வரக்கூடியதல்ல.

அப்பர், சுந்தரர், சம்பந்தர் போன்ற தமிழ் முனிவர்களும் தமிழ் வழிபாடல்களைப் பாடவில்லை. அவர்களுக்குப் பல வடமொழிப் புலமை பெற்ற பெரியோர்களை அறிமுகப் படுத்திச் சிறப்பித்துள்ளனர். மேலும் சேர சோழ பாண்டியர் காலத்திலும் தமிழில் வழிபடவில்லை.

தமிழ் வழிபாடு வருவதன் மூலம் அனைத்து இந்தியப் பார்வையைத் தமிழ்நாடு இழந்துவிடும் என்று எச்சரிக்கிறேன். சமற்கிருதம் இந்து மதத்திற்கு ஒற்றுமைப்படுத்தும் ஆற்றலேயாகும். காசுமீரத்திலிருந்து கன்னியாகுமரி வரை ஒரே இணைப்பில் இணைக்கும் கயிறு தான் சமற்கிருதம்"

ஒரு வழக்கிழந்த மொழியை தேவ மொழி என்று சொல்லிப் பார்த்தனர். மந்திர, தந்திரங்கள் மொழி என்றனர். அடுத்து மொழியியல் நோக்கிற்கு வந்து உலக மொழிகளுக்கெல்லாம் தந்தை மொழி என்று மொழியியலின் கழுத்தைப்பிடித்தனர். அப்படியும் சமற்கிருதத்தை உயிர்ப்பிக்கமுடியவில்லை. இப்போது புளுகல் வரலாற்றை கூறித் தம் ஒட்டுணித்தனத்தை வெளிப்படுத்தி, அதோடு நிற்காமல், தேசிய ஒற்றுமையைக் காரணங் காட்டியாவது சமற்கிருதத்தை உயிர்த்தெழுப்பப் பார்க்கின்றர். இதன் வெளிப்பாடே கிரனர் பேச்சு.

செய்தி: இந்தியன் எக்சுபிரசு
29.11.82

"தமிழ் நிலம்" தழைத்திட நன்கொடை!

'தமிழ் நிலம்' வளர்ச்சியில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட அன்பர்கள் தாமே முன் வந்து நன்கொடை நல்கியுள்ளனர். அவர்களின் கடமையுணர்விற்கு அகங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், இவ்வார்வலர் வரிசையில் அனைவரும் பங்கு கொள்ள வேண்டுகிறோம்,

(26.10.82 முதல் 19.11.82 வரை)

1.	சி. கணேசன், கிரனூர்.	10—00
2.	தமிழன்பர் ஒருவர் வேலூர்: வ. ஆ.	222—00
3.	புலவர். நாவை சிவம் இல. கி; கல். இ. மணப்பாறை	10—00
4.	கு. சுயம்புகேசவன், கன்னியாகுமரி, மா. வ.	3—00
5.	வினைதீர்குன்றன், சென்னை-1.	15—00
6.	அ. தெ. தமிழநம்பி, விழுப்புரம்.	50—00
7.	சா. சந்திரேசன், சென்னை-1.	20—00
8.	இரா. தமிழ்க்கதிர், திருக்கழுக்குன்றம்	9—50
9,	உளங்கவரழன், சேலம்.	4—15
10	புலவர். ச. திருமலைவேலவன், இல. இ, வத்தலக்குண்டு	10—00
11.	மு. வேந்தன், புதுச்சேரி-1,	5—00
12.	பு. பிரபு, மின்பாறை,	5—00

திரு. இர. ந. வீரப்பன் பேருரை!

மலேசியாவிலிருந்து கடந்த கிழமை தமிழகம் வந்துள்ள, உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைவர் திரு. இர. ந. வீரப்பன், இவ்வியக்கத்தின் புதுவைக் கிளை ஏற்பாட்டில் பாண்டியில் 4-12-82 காரிக்கிழமை மாலையில் நடத்தும் சிறப்புக் கூட்டத்தில் பேருரை ஆற்றுகிறார்.

இதே கூட்டத்தில் தில்லிப் பேராசிரியர் பர். சாலை இளந்திரையன், சாலினி இளந்திரையன், சென்னைக் கிளைத் தலைவர் வழக்கறிஞர் சு. மு. ஏழுமலை ஆகியோரும் உரையாற்றுவர்.

அன்று பகலில் புதுவை முதல்வரைக் கண்டு, பிரஞ்சுப் பகுதி நாடுகளில் வாழும் தமிழர்களின் பண்பாட்டுச் சிக்கல்களைக் குறித்தும் பேசவிருக்கிறார். புதுவை வானொலி, நாளேடு நேருரை நிகழ்ச்சியும் உண்டு.

மறைவு

திருச்சி மாவட்ட உ. த. மு. க. பொருளர் திரு. குழந்தை ஈகவரசன் அவர்களின் தந்தையார் வ. குழந்தைவேல் அவர்கள் கடந்த 24-11-82 அறிவனன்று திருச்சி மா.வ. பெரகம்பி என்னும் ஊரில் மறைந்தார் என்ற செய்தி கேட்டு மிகவும் வருந்துகிறோம். நம் இயக்க ஈடுபாடும், தென்மொழிப் பற்றும் கொண்ட அவர் நாடக ஆசிரியராகவும், சிறந்த கணியராகவும் விளங்கியவர். எட்டு மக்களுக்குத் தந்தையாரான அவர் மறைவால் துன்புறும் அவர் குடும்பத்தாருக்கும், திருச்சிமாவட்டப் பொருளருக்கும் நம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—பெருஞ்சித்திரனர்

தொடர் : 3

தமிழின வீழ்ச்சி வரலாறும் மீட்சி முயற்சிகளும்

சொல்லாய்வறிஞர்

ப. அருளி

வலீ.இ; ச.இ:

ஆனால், தமிழினத்தின் பழமுது வரலாற்றை அறிவதற்கு இன்றைக்குள்ள அரும் பெரும் ஆழமான சான்றுகளடங்கிய குறிப்புக் குவியலாகத், தப்பித் தவறி உய்ந்து உயிர்த்துக் கொண்டிருக்கும் கழகக்கால இலக்கிய நூல் தொகுதியும், தொல்காப்பிய இலக்கணப் பெட்டகமும் இலங்குகின்றன !

நடுநிலைக் கண்ணோட்டத்தோடு துருவிக் காண வல்ல எந்த வரலாற்று அறிவனும் தெள்ளிதின் விளங்கிக் கொள்ளுதற்கு இயலும்படியாக நூறுயிரம் வரலாற்றுச் செய்திகள் அவற்றில் தெறிப்பதையும், ஒளிர்வதையும், சில பகுதிகளில் பதுங்கியிருப்பதையும், பல பகுதிகளில் புதைபட்டுக் கிடப்பதையும் கண்டு கொள்வான் !

நடுநிலைக் கண்ணோட்டத்தோடு, மெய் காண வேட்டும் துடிப்புணர்வொடு முயன்று உழைப்பெடுக்க வல்ல எந்த மொழியியல் முனைவனும் உலகத்திலேயே முந்தி உருவெடுத்துள்ள அதன் உண்மைப் பாங்குகளையும், அதற்குரிய பல்லாயிரமாண்டு ஊட்ட வளர்ச்சியையும், அம்மொழியுள் பொதிந்து பதிந்துள்ள ஒரு பழம்பேரினத்தின் வாழ்க்கை வரலாற்று விளக்கத்தையும் சிறக்கவும் நிறக்கவும் காணவியலும் !

உலகின் பிற இனங்களின் வரலாற்றுக்குத் துணைகளாக இன்று வரை கிடைக்கும் அத்துணைச் சான்றுகளையும் ஓரிடத்தில் எடுத்து வைத்துக் கொண்டு, அதற்குப் பக்கத்திலேயே, தமிழினத்திற்கு என்று, இன்றைக்கு நிலைத்து நிற்கின்ற கடைக் கழகக் கால இலக்கண இலக்கியங்களாகிய அறிவு நூற் சான்றுகளையும் வைத்துக் கொண்டு, காய்தல்-உவத்தல் அகற்றிய செம்புலக் கண்களொடு ஆய்வுணர்வொடு ஒருவன் கூர்ந்து ஒப்பிட்டு நோக்குவானானால் தமிழ் மொழியின் செம்புல மேன்மையும் முன்மையும், அத்தகு பேராக்கத்தை உருச் சமைத்த தமிழினத்தின் பழைமையும் தலைமை வாய்ந்த அசைக்கவியலாத அடிப்படை உண்மைகளையும் அடைவொடு செறித்தாறு நிரலுற்ற ஒரு பெருங் காட்சியே முதன்முதலில் ஆங்கே அவனுச்குப் புலப்படுவதாகும் !

கழகக் காலத் தமிழிலக்கியங்களிலும், தொல்காப்பியத்திலும் காணப் பெறும் செய்திகள் யாவுமே, இலக்கிய வடிவில் அமைத்து வைக்கப் பெற்ற, அன்றைக்குத் தமிழினம் நடத்திய வாழ்க்கை வரலாற்றுச் செய்திகளே ! அவற்றை வெற்று இலக்கியங்களாகவே பார்க்கும் எவரும், உண்மை இலக்கின் இயல்பையும் தன்மையையும் தினைத்துணையும் உணராதவர்களே ஆவர் ! ஈராயிரம் மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டு அவற்றில் எழுதப் பெற்றுள்ள அன்றைய இலக்கியச் செய்திகளில் தமிழினத்தவரின் பல்லாயிரமாண்டுக்கால வாழ்க்கைப் போங்குகளின் படிநிலை வளர்ச்சியின் வரலாறே படிந்துள்ளது !

உலகில் அந்தக் கால அளவில் கிடைக்கும் பிற இனத்தவரின் நூல் செய்திகளை ஒன்றொன்றாக அதன் பக்கத்தே கொண்டு வந்து எடையிட்டுப் பார்க்கின்ற பொழுது, இரண்டிற்கும் உள்ள அறிவுத்திற வேறுபாடு, யானையளவிற்கும் பூனையளவிற்குமாக அல்லது ஒட்டக அளவிற்கும் ஒந்தி (ஓணான்) அளவிற்குமாகவே அமைந்திருக்கும் !

தத்துப்பித்தென்று பெரும்பாலான பிற இனத்தவரின் பிஞ்சும் பிருக்குமான அறிவுநிலைக் காலத்தில், முதிர்ந்து முற்றிப் பழுனிய, கனிந்து கொழுத்த பெரும்புல அறிவின் இனமக்களாகத் தமிழர் இருந்தமையை இன்றைக்குப் பட்டயங் கட்டிப் பறை சாற்றுவதற்குத் தொலகாப்பியம் திருக்குறள் என்னும் விளக்கவியல் இலக்கணமும் அறிவிலக்கியமாமுகிய சிறிய அளவான இரு நூல்களே போதுவனவாகும்.

இன்றைக்கு இருபத்தியேழு நூற்றாண்டுகட்கு முற்பட்டு நமக்குக் கிடைக்கின்ற, நம்மினத்தவரின் முதல் அறிவுச் சான்றானது, — இலக்கணமாகவே, அதுவும் பொருளுக்கும் பொருள் விரியக் காட்டி வகையமைவுகள் சுட்டும் இலக்கணமாகவே, கிடைத்துள்ளது என்பதற்கும் மேலாக, நம் தமிழ மரபின் பழமுதல் வரலாற்றிற்குத் தலைமைச் சான்று வேறெது வேண்டும் ?

கி. மு. ஏழாம் நூற்றாண்டளவில் எழுதப் பெற்ற தொல்காப்பிய இலக்கண நூலுள், தம் முன்னோர்கள் இப்படிச் சொல்வார்கள், இப்படி வகைப்படுத்துவார்கள் என்றவாறான பொருள்பட, 287 இடங்களில் தம் முன்னைய அறிவு முன்னோர்கள் உரைப்பதாகச் சுட்டப் பெறும் இடங்களில், நம்மின் பழைய வரலாற்றுப் பீடும் பெருமிதமும், வளப்பமும் வாளிப்பமும் அமைந்த செம்மாந்த நிலை வெளிப்படுகின்றது என்பதில், அறிவுக் கசடர்க்கு அன்றி, பிற அறிவர் உள்ளத்தில் மறுப்பெழ வாய்ப்புள்ளதோ ?

தம் அறிவு முன்னோரைத் தொல்காப்பியர் சுட்டுமிடங்களில், ''நுண்ணிதின் உணர்ந்தோர்,'' ''நேரிதின் உணர்ந்தோர்,'' ''தொன்னெறிப் புலவர்'' என்றவாறு உயர்வும் மதிப்பும் தருகின்ற சொல்லாட்சிகளுக்குப் பின்புலத்தில் அன்றைய தமிழுலகத்தின் அறிவுக்குலப் பரப்பும் விரிவும் ஆழமும் தெளியத் தோன்றுவதை காழ்ப்பினரும் காரறிவினரும் அன்றி எவரால் மறுக்க வியலும் ?

அந்தக் காலத்துக்குப் பன்னூறு ஆண்டுகட்கும், பல்லாயிரம் ஆண்டுகட்கும் முற்பாடேயே வதிந்த, பொதிந்த அறிவு நூற்புலவர்களின் கூற்றுக்களை, அறிவாக்கங்களையெல்லாம் கூர்ந்து கூரக் காட்டும் முகமாக, என்மனார் (74 இடங்களில்), என்ப (114 இடங்களில்) என்றவாறாகத் தொல்காப்பியர் சுட்டுவதில், பழந் தமிழினத்தின் அறிவுவளக் கொழுமையின் வரலாறு இல்லை என்று, அறிவு கலங்காத எவரேனும் கூற வியலுமோ ?

நூல் மரபு, மொழி மரபு, தொகை மரபு, விளி மரபு என்றவாறாக அதிகாரங்கட்குள் அடங்கிய இயல் தலைப்புகளைக் குறித்திருப்பதும், **''மரபு இயல்''** என்றவாறு தனிப்பட ஒரு சிறப்புத் தலைப்பே தந்திருப்பதும், **''மரபு''** என்ற சொல்லைத் தம் நூற்பாக்களிடையே 60 இடங்களுக்கும் மேலாகப் பயின்றிருப்பதும், தமிழ முன்னோரின் மரபு மரபாகத் தொடர்ந்த அறிவு வாழ்க்கையின் பெரும் பரப்பையுணர்த்தும் குறிப்புள்ள இடங்கள் அன்றி வேறு எவை ?.

''அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்

....

நரம்பின் மறைய என்மனார் புலவர்'' என்பது, தொல்காப்பிய எழுத்ததிகாரத்தின் கடை கோடியில் முடிவெய்ந்திருக்கும் ஒரு நூற்பா ஆகும். இதற்கு ''முற்கூறிய உயிரும் உயிர்மெய்யும் மாத்திரையை இறந்தொலித்தலும் ஒற்றெழுத்துகள் அரை மாத்திரையின் நீண்டொலித்தலும் யாழ் நூல் இடத்தன என்று கூறுவர் புலவர்'' என்று நச்சினார்க்கினியர் உரை வரைவார். இந்த நூற்பாவில், 27 நூற்றாண்டுக்கு முன்பேயே, யாழ் என்னும் இசைக் கருவிக்குப் பல இசையிலக்கண நூல்கள் இருந்தன என்னும் உண்மையும், ''இந்த நூற்பாவின் இலக்கணக் கூறுகள் யாழ் நூல்களிடத்தில் அடங்குவனவாகும் என்று முன்னைப் புலவர்கள் சொல்லுவார்கள்'' என்று முற்படக் கூறிய மெய்ம்மையும், விளங்க ஒளிர்கின்றது என்பதனை, மனத்திலும் அறிவிலும் இருள் படர்ந்து அவிந்த மனத்தவர் அல்லாமல் வேறு எவராலும் வேறுபட எண்ண முடியுமோ ?

(நீளும்...)

சொல்லும் பொருளும்

தொடையும் குறங்கும் (Thigh)

இடுப்புக்கும் கால்முட்டிக்கும் இடைப்பட்ட காலின் பகுதியுறுப்பைத் 'தொடை' என்ற சொல்லால் குறித்து வருகின்றோம். சொல்லமைப்பில் இது மிகப் பழைய ஒரு சொல் ஆகும்.

இடுப்பைத் தொட்டுக் கொண்டிருப்பதால் 'தொடை' என்றவாறு பொருட் காரணம் கூறுவோரும் உளர். சொல் தோன்றிய வகையைத் தொட்டாமலேயே கூறும் கூற்று அது!

தொடை

தொடு=சேர், ஒன்றாகக் கட்டு, நெருங்கு, ஒன்று.

தொடு+அர்=தொடர்=இணைவு, தொடரி. 'சங்கிலி' என்னும் வடசொற்கு நேரிய அரிய பழந் தமிழ்ச்சொல். தொடுத்தல்=கட்டுதல், சேர்த்து வைத்தல். தொடு-தொடை=சேர்த்துக் கட்டிய மாலை.

தொடு தொடு=திரட்சி, கூட்டம், செறிவு. தொடு+அம்—தோட்டம்=மரஞ்செடி கொடி செறிந்த தோப்பு. தொடு=திரள் தொட, தொட்ட= பெரிய (கன்னடம்) தொடு—தொடை—காலின் திரண்டு செறிந்த பகுதி உறுப்பு. 'பணைத்தொடையிரண்டும் பருவேல் காக்க' எனவரும் அண்மைக் காலக் 'கந்தர்சட்டிக் கவசத்திலும்' அதன் பருமைக் கருத்தைக் காண்க!

குறங்கு:

குறங்கு என்னும் சொல், தொடையைக் குறித்த மற்றுமொரு பழந்தமிழ்ச் சொல் ஆகும்.

குறு=நெருங்கு. குறுகு=நெருங்கு, ஒன்று, அருகாகு. குறு+அங்கு குறங்கு=நெருங்கியிருக்கும் திரண்ட தொடையாகிய உறுப்பு.

செறிந்த குறங்கின் அம்கலுழ் மாமை (அகம்: 96-11-12), செறி குறங்கின் பாசிழை பகட்டல்குல் (பட்டினப்பாலை: 146 - 147), சேர்ந்துடன் செறிந்த குறங்கிற் குறங்கென மால்வரை ஒழுகிய வாழை (சிறுபாணாற்றுப்படை: 20 - 21), இரும்பிடித் தடக் கையின் செறிந்து திரள் குறங்கின் (பெருநராற்றுப் படை: 40), என்றவாறு வரும் 'கழக இலக்கிய வரிகளில் குறங்கின் (தொடையின்) செறிவையும் திரட்சியையும் குறித்த காரண அடைகளின் திரட்சியைக் காண்க!

ப. அருளி

★ தலைமை மாறினால் போதாது — உள்ளம் மாறவேண்டும் ★

நடைபெற்று முடிந்த பெரியகுளம் நாடாளுமன்றத் தேர்தல் தமிழ் மக்களின் அரசியல் ஆர்வத்தை ஒரு சோற்றுப் பதமாக மிகத் தெளிவாக உணர வைத்துள்ளது.

திரவிட இயக்கங்கட்கு அல்லாவது இந்தி வல்லாண்மை எதிர்ப்பு இயக்கங்கட்கு 85 விழுக்காட்டுக்கு மேலும், இந்திக்குச் சார்பாக உள்ள அல்லது இந்தி வல்லாண்மையை எதிர்க்காத அனைத்து அனைத்திந்திய அரசியல் கட்சிகளுக்கும் 10 விழுக்காட்டுக்குக் குறைவாகவும் பெற்றுப் பெருந் தோல்வியடையச் செய்துள்ளனர்.

உடனே இந்திரா கட்சியினர் தலைமையை மாற்றிக் கரணம் போடுகின்றனர். அவர்கள் தலைமையை மாற்றுவதைக் காட்டிலும் உள்ளத்தை மாற்றுவது ஒன்றுதான் வரும் தேர்தல்களில் அவர்களைத் தேடிப் பார்க்க உதவும்.

ஒரு பக்கம் இந்தியை எப்படியேனும் தமிழ் நிலத்தில் புகுத்திவிடக் கங்கணம் கட்டிக் கொண்டு, ஒரு பக்கம் ஒருமைப்பாடு பேசும் அவர்கள் வடநாட்டு இந்தி வல்லாண்மையைத் தெளிவாகவே தமிழ் மக்கள் புரிந்து சரியான வழியில் தீர்ப்பு அளித்துள்ளனர்.

இனி திரவிட இயக்கக் கட்சிகளான அ. இ. அ. தி. மு. க. தேர்தலில் வெற்றி பெற்றாலும் மொத்தத்தில் 50 விழுக்காட்டு மக்களுக்கு மேல் அக்கட்சியை எதிர்த்து ஒப்போலை அளித்துள்ளதை மறக்காமல், மேற்கொண்டு வரும் தேர்தலில் மேலும் அதிக விழுக்காடுகளைப் பெற முயல வேண்டும். அரசின் தவறுகளைக் கண்டித்து 50 விழுக்காட்டுக்கு மேல் மக்கள் ஒப்போலையளித்துள்ள திறம் இருந்து அவர்கள் பாடம் பெறவேண்டும். இனியேனும், அவர்கள் ஆரியத்திற்குத் துணைநிற்கும் போக்கைக் கைவிட்டுத் தமிழ் நிலத்தில் முழு உரிமை வாழ்வு அமையவும், தமிழ்நில உரிமைகளான காவிரிநீர், பாலாற்று நீர், மற்றும் கிடைக்க வேண்டிய உரிமைகளைப் பெறுவதற்கு எதிர் கட்சிகளுடன் இணைந்து முனைந்து போராடி வெற்றியீட்டவும் பாடுபட வேண்டும்.

அடுத்து, தி. மு. க. அணியினரைத் தமிழ்மக்கள் விரும்பினாலும் ஆளுங்கட்சியாக விரும்பாமல் எதிர்க் கட்சியாகவே விரும்புவதைப் விளங்கிக் கொள்ள வேண்டும். 36 விழுக்காடு மக்கள் தி. மு. க. வை விரும்பியுள்ளனர் என்றால், அது செய்த தமிழ் இன நன்மைக்காகவும், ஆளுங்கட்சியை எதிர்த்து உண்மைகளுக்குப் போராடியதற்காகவுமே. இனியும் இந்திரா கட்சியுடன் கூட்டுச் சேருவதற்காக முனைந்து ஆளும் திராவிடக் கட்சியைக் காட்டிக் கொடுக்க முற்பட்டால் அது தி. மு. க. விற்கு அழிவையே கொடுக்கும். தனித்து வெற்றி பெறாவிட்டாலும் இருக்கும்சாய்காலைக் காப்பாற்ற வேண்டிய கட்டாயம் தி. மு க. விற்கு உள்ளது. இனி அதனிடம் உள்ள போலித் தன்மைகளை மறந்து மக்கள் தீர்ப்பை மதிக்க வேண்டும். நீங்கள் ஆளும் போது செய்யாததையா அ. தி. மு. க. செய்ததுதாயான நீங்கள் 8 அடி பாய்ந்தால் குட்டியான அ. தி. மு. க. 16 அடி பாய்வதில் தவறென்ன ? எனவே மக்கள்

(5-ஆம் பக்கம் பார்க்க)

வருக ! வருக தமிழ் நிலம் !

வருக ! வருகவே தமிழ் நிலம் ! — புது
வாழ்வு பெறுகவே தமிழ்க்குலம் !
மருவும் பகையெல்லாம் நீங்கவே !—தமிழ்
வாழ்வுத் துறையெல்லாம் ஓங்கவே !
பெருக தமிழர்கள் வீடெலாம் !— அதன்
பெருமை விளங்குக நாடெலாம் !
அருமைத் 'தமிழ் நிலம்' வளர்கவே ! – தமிழ்
அகமெலாம் புதுமைகள் கிளர்கவே !... (வருக)

வாழ்முறை தனிமிகக் காட்டிடும் !—நம்
மனங்களில் எழுச்சியை ஊட்டிடும் !
தாழ்நிலை தன்னையும் கொய்திடும் !—நாம்
தலைநிமிர்ந் தோங்கிடச் செய்திடும் !
ஊழ்வினை தன்னையும் மாற்றிடும் !
உரிமையும் பெருமையும் போற்றிடும் !
ஆழ்கடல் உலகில்வாழ் தமிழரை — ஓர்
அணியினிற் சேர்த்திடும் 'தமிழ் நிலம்'!...
(வருக)

காலம் தந்தநற் பரிசடா !—நமைக்
காத்திட முழங்கிடும் முரசடா !
கோலத் தமிழின விடுதலை—தனைக்
கூட்டிடும் இதன்வழி இடுநடை !
பாலம் இதுதமிழ் இனத்துக்கே !—தாய்ப்
பாலிது வாம்தமிழ் மனத்துக்கே !
ஞாலம் புகழ்புது வாழ்வுறத்—தமிழ்
நாடெலாம் 'தமிழ் நிலம்' சூழ்கவே !... (வருக)

—புலவர். பொதிகைச் செல்வன், பவானி.

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தீர்ப்பை மதிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். இந்தி யெதிர்ப்பில் ஆளுங்கட்சியோடு இணைந்து பணியாற்றி விரைவில் அதற்கொரு முடிவு காணுங்கள்.

இனி இரு திரவிடக் கட்சிகளுக்கும் ஒரு கருத்து. தமிழ் மககள் திரவிட இயக்கங்களை மட்டுமே ஆதரிக்கின்றனர் என்பதை இரு கட்சிகளுமே அறிகின்றன. அப்படி இருக்கையில் இனியும் வட இந்திய வல்லாண்மைக் கட்சிகளுக்கு ஆட்பட்டு இழிவைப் பெறுவதை உடனே நீங்கள் நிறுத்தவேண்டும்.

நீங்கள் ஒன்று சேரா விட்டாலும் தற்போது பெரிய குளத்தில் பெற்ற அடிப்படையில் இருவரும் தொகுதி உடன்பாடுகொண்டு, வரும் தேர்தல்களில் எந்தத் தேர்தலாயினும் 49/85 பங்கு அதிமுகவிற்கும் 36/85 பங்கு தி.மு.க. வும் பெற்று ஒன்று ஆளுங்கட்சியாகவும ஒன்று ஆக்கமுறையிலான எதிர்க் கட்சியாகவும், இருந்து தமிழ் மக்கள் எந்த வகையிலும் ஏமாற்றப்படாமல் தலை நிமிர்ந்து உரிமை வாழ்வு காணவும், தமிழ்க்கலை, நாகரிகம், பண்பாடு செழிக்கவும் பாடுபட வேண்டும்.

இது நடக்கவில்லையென்றால் அ.தி.மு.க.வை பார்ப்பனர்கள் கைக்கொண்டு, திமுகவை அழிப்பதுடன் தமிழ் இன நலனும் பறிபோய்விடும். எனவே இரு கட்சிகளும் எண்ணிச் செய்வனவாக.

இனி உ.த.மு.க. முதல்வருக்கும் தி.க. செயலர் தளபதி வீரமணிக்கும் ஒரு வேண்டுகோள். இனி வருங்காலத்தில் தமிழ் இன உரிமைக்காகப் போராட வேண்டிய கட்டாயங்கள் நிறைய உள்ளன. அதற்கு வாய்ப்பாகவும், காப்பாகவும், குறைந்த அளவு வடநாட்டுக் கட்சிகளைப் புறக்கணித்து அதிமுகவும், திமுகவும் தொகுதி உடன்பாடாவது கண்டு தமிழ் நிலத்தில் வேறு வல்லாண்மைகளுக்கு இடமில்லாத படி செய்ய வேண்டிய கடப்பாடு உள்ளது. தக்க முறையில் முயல இருவரையும் கேட்டு முடிக்கின்றேன்.

—தென்மொழி,
நா. இளமாறன்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின்
தலைமையக வெளியீடு

உலகத் தமிழர் குரல்

மீண்டும் யாழ்ப்பாணத்திலிருந்து மலர்கிறது!

சிறப்பாசிரியர் : குரும்பசிட்டி இரா. கனகரத்தினம்
பொறுப்பாசிரியர் : எசு. செயசேகரன்
உறுப்பாசிரியர் : இர. ந. வீரப்பன்

தலைமையகம் :
110, JALAN BANGAU, BERKELEY GARDEN
KELANG, MALAYSIA.

வடநாட்டை வளப்படுத்தவே நடுவணரசு முயல்கிறது !

தமிழ்நாடு ஒதுக்கப்படுகிறது ! தமிழினம்புறக்கணிக்கப்படுகிறது

உள்ளக் குமுறலுடன் ஒரு மடல் !

அன்புசான்ற ஐயா,

வணக்கம். ''தமிழ் நிலம்'' இரண்டாம் இதழில் பாவலரேறு ஐயா அவர்களின் நேருரை தேசியக் குழப்பக் காரர்கட்குத் தெளிவூட்டும் விளக்கவுரையாக விருந்தது.

தமிழ்நாட்டின் பால் நடுவணரசு அக்கறையற்றும், புறக்கணிப்பாகவும் நடந்து கொள்வதை ஓரிரு காட்டுகளுடன் ஐயா விளக்கியிருந்தார்கள். அதன் தொடர்பாகச் சிலவற்றைத் தமிழ்நாட்டுப் பொது மக்களின் கவனத்திற்குக் கொண்டு தருதல் நன்மை பயக்கும் எனக் கருதி கீழ்க் காணபவற்றைத் தருகின்றேன்.

1. மின்னியல் (ELECTRONICS) துறைத் தொழிலில் தில்லியும் பிற வடமாநில நகரங்களும் மிக மிக முன்னேற்றம் கண்டிருக்க தமிழ்நாடு மிகமிகப் பின் தங்கிப் போக விட்டமை.

2. நடுவணரசு அதிகாரத்திற்குட்பட்ட பெருந் தொழிற்சாலைகள், தேசிய ஆய்வகங்கள் (Laboratries) ஆய்வு நடுவங்கள். ஆய்வு அமர்த்தங்கள் (Installations) முதலியவை தமிழ் நாட்டில் எந்து நிலைகள் மற்றும் வாய்ப்பு நிலைகளிருந்தும் அமைக்கப் பெறுமல் வலிந்து பெருஞ்செலவுகளைப் பொருட்படுத்தாது வடமாநிலங்களில் பெருவாரியாக அமைக்கப்பட்டுள்ளமை.

3. சேலம் (இரும்பு) உருக்காலைத் திட்டம் வெறும் தகடு - உருட்டு - ஆலை ஆக மாற்றப்பட்டமை.

4. உதகையில் அமைந்திருக்க வேண்டிய வண்ணப்படச் சுருள் தொழிற்சாலை தேவையற்ற மிகுதிச் செலவோடு உத்திரப் பிரதேசம் 'நைனி'யில் அமைக்கப்படுகின்றமை.

5. ஒசூர் சாலையில் அமையவிருந்த மின்னியல் தொலைபேசி நிலையக் கருவி செய்யுந்தொழிற்சாலை உத்திரப் பிரதேசம் 'கோண்டா'வில் அமைக்கப்படுகின்றமை.

6. சென்னை, பெரம்பூரில் நடத்தினால் 15 கோடி செலவிட்டால் போதும் என்ற நிலையிருந்தும் 90 கோடி செலவில் மூன்றும் தொடர் வண்டிப் பெட்டித் தொழிற்சாலை அரியானாவில் அமைக்கப்படுகின்றமையும் அதனால் 5000 பேருக்கான வேலை வாய்ப்பை தமிழ்நாடு இழக்கின்றமையும்,

7. விளையாட்டுத்துறை முதல் விண்ணாய்வுத்துறை வரை வடவர், தென்னாட்டார் (குறிப்பாகத் தமிழர்) என்ற பாகுபாடும் பரவலாகத் தமிழர் புறக்கணிக்கப்படுகின்றமையும்,

8. தமிழ் நாட்டில் உள்ள ஓரிரு அரசினர் தொழிற்சாலைகளிலும் எல்லாமட்ட அலுவல்களையும் பிற மாநிலத்தார் பற்றிக் கொண்டு தமிழரின் வேலை வாய்ப்பு நிலைகளைச் சுரண்டுகின்றமை.

9. பிற மாநில முதலாளிகள் போலி (பினாமி)ப் பெயர்களிலும் நேரடியாக்வும் தொழில் நடத்திச் சுரண்டுகின்றமை.

10. மாநில அரசு தட்டுத் தடுமாறிப் பெருமுயற்சி எடுத்துத் தொடங்க முனையும் ஓரிரு தொழிற்சாலைகளுக்கும் நடுவணரசிடம் இசைவிற்காக (LICENSE) கையேந்தி காத்திருக்க வேண்டியுள்ளமை.

11. தமிழ்நாட்டின் பெரு நகரங்கள் முதல் பட்டி தொட்டி எங்கும் வட்டிக் கடை நடத்தி மார்வாரிகள் தமிழரைச் சுரண்டிக் கொழுப்பதோடு ஊரையே தெருத் தெருவாக விலைக்கு வாங்கிக் கொண்டு இருக்கின்ற நிலையில்—

பிறமாநிலங்களில் உள்ள தமிழன் கூலிக்காரனாகவும இரவு (பிச்சைக்) காரனாகவும் சாலை ஓரத்திலும் சாய்க்கடை ஓரத்திலும் ஒதுங்கி வாழ்கின்ற நிலைமை நாள் தோறும் வளர்ந்து வருகின்றமை.

12. கடந்த 15 ஆண்டுக் காலமாக நடுவணரசு தமிழ் நாட்டில் தொழில் தொடங்கி வேலை வாய்ப்பு தரவில்லை என்ற ஓரளவு அக்கறையுள்ள அரசியற் காரர்களின் ஓலங்கள் தொடர்கின்றமை.

இன்னும் பலவற்றையும் தொடாந்து பட்டியல் போட்டுக் கொண்டே போகலாம்.

ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு நிலையிலும் தமிழ்நாடு எப்படியெல்லாம் ஒதுக்கப்படுகிறது, தமிழினம் எவ்வாறெல்லாம் புறக்கணிக்கப்படுகிறது. தமிழ்மொழி எவ்வாறெல்லாம் தாக்கப் பெறுகிறது என்பதையும் அவ்வத்துறையிலும் அவ்வந் நிலையிலும் நடுவணரசு எப்படி புறக்கணிப்பாகவும், கண்டுங் காணாத்தனமாகவும் நடந்து கொள்கின்றது என்பதையும தமிழக அரசின் செயலற்ற போக்கையும், நிலையையும் 'தமிழ் நிலம்' பொதுமககளுக்கு விளக்க வேண்டும என்று கேட்டுக் கொள்கின்றேன். உங்கள் சீடற்ற முயற்சிக்கு நெஞ்சு நெகிழ்வுடன் நன்றி கூறுகின்றேன்.

அன்பன்,
கோளரி
(தமிழக விடுதலைக்காக வாழும் ஓர் உயிர்)
முண்டியம்பாக்கம், தெ. ஆ.

இலங்கையைப் பவுத்தக் குடியரசாக்கவும் சிறிமா சாத்திரி ஒப்பந்தக் குடிகளுக்குச் சிங்களத்தைக் கற்பித்தல் மொழியாக்கவும் இலங்கையில் புத்த குருமாரின் முயற்சிகள் !

'இலங்கையைப் பவுத்தக் குடியரசாக அறிவிக்க வேண்டும் ; எல்லா உயர்பதவிகளுக்கும் சிங்களம் பேசும் பவுத்தர்களே அமர்த்தப்பட வேண்டும் ; சிறிமா-சாத்திரி ஒப்பந்தத்தின்கீழ்க் குடியுரிமை பெறுவோருக்குச் சிங்களமே கற்பித்தல மொழியாக்கப்பட வேண்டும் என்பன உட்பட இருபத்தைந்து கோரிக்கைளைக் குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட்ட ஆறு வேட்பாளருக்கும் இலங்கைப் பவுத்த சங்கங்களின் அமைப்பு முன்வைத்தது. குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட்ட சிறிலங்கா தன்னுரிமைக் கட்சி வேட்பாளர் திரு. எக்டர் கொப்பெ கடுவ இக் கோரிக்கைகள்பற்றி ஆராய்ந்து உரையாடல் நடத்தத் தம் சார்பில் மக்கள் ஒன்றிய முன்னணியின் தலைவர் தினேசு குணவர்த்தனவை அமர்த்தினர். 25 கோரிக்கைகளில் சில கூறுகள் பின் வருமாறு :

1. இலங்கையைப் பவுத்தக்குடியரசாக அறிவித்தல் ; 2. பவுத்தமே அரசு மதம். (இப்பொழுதும் இதுதான் அரச மதம்); 3. அரசு உயர் பதவிகளில் சிங்களப் பவுத்தர்களே அமர்த்தம் பெற வேண்டும் ; 4. சிறிமா - சாத்திரி ஒப்பந்தத்தைத் தொடர்ந்து செயலாக்குதல். (இது முன்னமே காலங்கடந்து விட்டது); இதன்கீழ இலங்கைக் குடியுரிமை பெறுவோருக்குச் சிங்களத்தைக் கல்வி மொழி யாக்குதல் ; 5. இன விழுக்காட்டிற்கேற்ப வீடுகள், அரசு நிலங்கள், உயர்கல்வி ஆகியவை வழங்கல் ; 6. பெரும்பான்மை இனத்துக்குக் குந்தகமான முறையில் கையாளப்படும் குடும்பக்கட்டுப்பாடு முறையைக் கையாளுவோருக்குக் கடும் தண்டனை வழங்க நடவடிக்கை எடுத்தல் ; 7. அனைத்து அரசு நிகழ்ச்சிகளும் பவுத்தப்பண்பாட்டு முறையில் நடத்தல் ; அவற்றில் பவுத்தர்களுக்கு முதலிடம் கொடுத்தல்; 8. புத்த பிக்குகளுக்கான கல்வி, தனி வழக்கு மன்றம் போன்றவற்றை அரசே அமைத்தல் போன்றவை.

இவை புத்தக்குருமார்களின் தமிழின வெறுப்புக்குச் சில எடுத்துக்காட்டுகள்.

தகவல்: ஈழச்செய்தி (1-11-82)

தொடர் : 5

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

தலைமையகம், சென்னை—5

தலைமையக அறிக்கை

அறிக்கை எண்: அறி/பொ.ஓ.12/82. நாள்: 21-11-82

பொருள்: தலைமைக்கழக இசைவில்லாமல் மாவட்ட, வட்டத் தலைமைக்குழுக் கூட்டத் தீர்மானம் இல்லாமல்—தனிப்பட்ட அறிக்கை, செயல் வடிவ வேண்டுகோள்கள் வெளியிடுவது தொடர்பாக:

அண்மையில், சில வட்டக் கழகங்கள், தலைமைக் கழக முன் இசைவோ, குறிப்பிட்ட மாவட்ட, வட்டத் தலைமைக் குழுத் தீர்மானமோ இன்றி, தனிப்பட்ட முறையில் அரசுக்கோ, அரசியல் அதிகாரத் தலைமையர்க்கோ, கழகத்தின் பெயரால், கழகக் கொள்கைகளைச் செயற்படுத்தும் தேவையின்றி, கழகம் சாராதஒருவர் பொருட்டோ ஓரியக்கத்தின் பொருட்டோ, அவர்களின், அல்லது அதன் செயலூக்கத்திற்குச் சார்பாகவோ, மாறுகவோ அறிக்கைகள், வேண்டுகோள்கள் கொடுத்துள்ளதாகத் தலைமையகத்திற்குத் தெரியவந்துள்ளது.

•கொள்கையளவில் அவ்வறிக்கைகளோ, வேண்டுகோள்களோ, கழகத்தின் வரையறுக்கப்பட்ட கோட்பாடுகளுக்கு மாறுக இல்லாமல் இருப்பினும், இயக்க அளவில் அது போலும் நடைமுறைகள் இயக்கக் கட்டுக் கோப்பைச் சிதைப்பதாகும்.

இதுபோலும் அறிக்கைகள், வேண்டுகோள்களை வெளியிட விரும்பும் மாவட்ட வட்ட உ.த.மு.க. அமைப்புகள் அவற்றைத் தலைமையகத்திற்கு முன் கூட்டியே தெரிவித்து இசைவு பெற்றே, மாவட்ட வட்டக் கழகங்களின் சார்பில் தலைமைக் குழுக்கூடித் தீர்மானம் போட்டுத் தெரிவித்தோதான், அவ்வறிக்கைகளையும் வேண்டுகோள்களையும் வெளிப்படுதத வேண்டும் என்று அறிவிக்கப் பெறுகிறது.

இதற்கு மாறுக எந்த மாவட்ட அமைப்போ, வட்ட அமைப்போ, நடந்து கொள்ளுமாயின், அவை தலைமைக் கழக ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆளாகவேண்டி வரும் என்று எச்சரிக்கப் பெறுகிறது.

தலைமையகம்
சென்னை—5.
27-11-82

பெருஞ்சித்திரனுர்
முதல்வர்
உ. த. மு. க.

பிரித்தானியர் வருகை (BRITISH):

கிழக்கிந்திய பிரித்தானிய 'வாணிகக் கழகம்' மற்றைய கிழக்கிந்திய வாணிகக் கழகங்களைப் போலல்லாது, பெரும் ஏற்றுமதி, இறக்குமதி வாணிகத்தில் ஈடுபட்டது. வெள்ளைக்காரருடைய மரக்கலங்கள் — பொன்னேடு வந்து பொருளோடு போயின அக்காலத்தில். 'வெண்ணெய் சுவைத்த எலி.— நெய்க்குடுவையில் (Bottel) வாலைவிட்டு நக்கிச் சுவை கண்டதாய என்றதைப் போல வாணிகத்தில் சுவைகண்ட — வெள்ளையர்கள் படிப்படியாக அரசுரிமையில் சுவை காண முற்பட்டனர், ஏறத்தாழ நாற்பது(40) நாடுகளுக்கு மேல் நமதாளுமையைச் செலுத்தி, அங்கு முழு உரிமையுடன் வாழ்ந்த நூறுகோடி (பத்தாயிரம் இலக்கம்) மக்களின் உரிமைகளைப் பறித்து, நசுக்கி, ஆடுமாடுகளைப போல் நாடுகள் பல கடத்தி அங்கு அவர்களைக் கொத்தடிமைகளாக்கி, அம் மக்களின் உழைப்பைச் சுரண்டி — இங்கிலாந்தில் வாழ்ந்த நாலுகோடி (நாநூறு இலக்கம்) வெள்ளைக்கார மக்களின் நலன்களைப் பாதுகாத்தனர் ஏறத்தாழ 96% மக்களின் கடும் உழைப்பின் முழு வருவாயையும் பயன்படுத்தி இங்கிலாந்தில் 4% மக்கள் செல்வச் செழிப்பாக வாழ்ந்தனர்.

தலைசிறந்த இயற்கைத் துறைமுகம் :

உலகிலேயே சிறந்த இயற்கைத் துறைமுகங்களில் ஒன்றுன திரிகோணமலைத் துறைமுகத்தை ஆங்கிலேயர் ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்றினர். அமெரிக்காவில் ஆங்கிலேய ஆளுமையை எதிர்த்து,விடுதலைப்போர் நடந்தது. இப்போரில் ஒல்லாந்தர் அமெரிக்கர்களுக்குத் துணையாக இருந்தனர். இதனுல் ஒல்லாந்தர் கைப்பற்றிய நாடுகளை ஆங்கிலேயர் கைப்பற்றினுர்கள். இக்கால கட்டத்தில்தான், உலகிலே தலைசிறந்த இயற்கைத் துறைமுகமாக விளங்கிய திருகோணமலைத் துறைமுகத்தை, ஆங்கிலேயர் ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்றினர். தென்கிழக்காசிய நாடுகளை அடிமைப்படுத்துவதற்குத் தலைசிறந்த தளமாகத் திருகோணமலைத் துறைமுகம் விளங்கியது.

எவன் திருகோணமலைத் துறைமுகத்தை வைத்திருக்கிருனே, அவன் இந்துமாக் கடலின் திறவு கோலையே வைத்திருப்பதாகப் பொருள்' என பிரித்தானியாவின் அன்றைய தளபதி 'வில்லியம்பில்' கூறியது இங்குக் குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை இயற்கைத் துறைமுகத்தால் மட்டும் சிறந்திருக்கவில்லை. இது சைவர்களின் வழிபாட்டுத்தளமாகவும் விளங்குகின்றது. ''குடிதனை நெருக்கப் பெருக்கமாய் வாழ்ந்த கோணமாமலை'' என நாயன்மார்களால் பாடல்பெற்ற 'திருக்கோணேசுவரம்' என்னும்சைவக் கோவில் இதன் மலை உச்சியில் இன்றும் காணப்படுகின்றது. இங்கு தமிழ்ச் சைவர்கள் நெடுங்காலமாக வாழ்ந்தார்கள் என்பதற்கு இது சான்றுகும். செங்குத்தாக இருக்கும் மலை உச்சியில் இருந்து திருகோணமலை மாவட்டத்தின் அழகை அளவிட முடியும். கடற்கரையிலே இம்மலை அமைந்திருப்பதினுல் கடல் அலைகள் இம்மலையில் ஓயாமல் மோதிப் பெரும் ஒலியை எழுப்பிக் கொண்டிருக்கும். இவ்வோசையிலே அமைதியைக் காண்பதற்குப் பலர் இம்மலையுச்சியிலிருந்து இளைப்பாறுவார்கள். இன்று பல பெண்கள் இம்மலையுச்சியிலிருந்து கடலுக்குள் குதித்துத் தற்கொலை செய்து கொள்வதினுல் அமைதியின்மையின திறவு கோலாகவும் இம்மலை காட்சி அளிக்கின்றது.

திருகோண மலை மாவட்டத்தில் கன்னியா என்னும் இடத்தில் ஏழு கிணறுகள் தோண்டப் பெற்றுள்ளன. இவ்வேழு கிணறுகளும் ஏறத்தாழ நூற்று ஐம்பது சதுர அடி நிலபரப்பில் அமைந்துள்ளன. இக்கிணற்றுக்குள் இருக்கும் நீரின் - வெப்பநிலை ஒன்றுக் கொன்று மாறுபட்டதாகவிருக்கும். முதல் கிணற்றில் குளிர்ந்தநீரும், அடுத்துள்ள கிணறுகளில் சிறிது சிறிதாக வெப்ப நிலை கூடிச் சென்று கடைசிக் கிணற்றில் மிகக் கூடிய வெப்ப நிலையுள்ள நீரும் காணப்படுகின்றது.

முட்டை அவியக்கூடிய அளவுக்குள்ள வெப்ப நிலையை ஏழாவது கிணற்றில் காணலாம். நிலத்தின் தன்மைக்கேற்ப கீழ் நீரோட்டத்தில் வெப்ப மாறுதல்கள் இருக்கும் என்பது அறிவியலுக்குட்பட்டதேயாயினும், குறுகிய நிலப்பரப்புக்குள் ஈழத்தில் கன்னியாவில் மட்டுமே சுடுநீர்க் கிணறுகளைக் காணக்கூடியது ஒரு சிறப்புவகையே!

எனவே திருகோணமலைத் துறைமுகம் பிரித்தானியர் கைக்கு மாறியதால் ஆங்கிலேயரின் ஆளுமை வலுப்பெற்று விடுமென அஞ்சினர், பிரெஞ்சுக்காரர்கள் (FRENCH). துறைமுகத்தை ஆங்கிலேயரிடமிருந்து கைப்பற்றி அதனை ஒல்லாந்தரிடம் மீளக் கொடுத்தனர் பிரெஞ்சுக்காரர். இதன் பின் ஐரோப்பிய நாடுகளில் அரசியல் நிலைமை மாற்றமடைந்தது. மாவீரன் நெப்போலியன் தலைமையில் பல நாடுகளைக் கைப்பற்றினர். பிரஞ்சுக்காரர். ஒல்லாந்து மன்னன் 'உவில்லியம்' நாட்டைவிட்டோட அந்நாட்டை அடிமைப்படுத்திஞன் நெப்போலியன். இதனுல் ஒல்லாந்தருக்கும் - பிரித்தானியர்களுக்கும் ஒரு நெருக்கடி உறவு ஏற்பட்டது. திருகோணமலையை பிரித்தானியரின் பாதுகாப்பில் வைத்திருப்பதாகவும் பிரெஞ்சுப்போர் முடிவுற்றதும், துறைமுகத்தைத் திரும்ப ஒல்லாந்தரிடம் கொடுத்து விடுவதாகவும் ஏற்றுக்கொண்டனர். இதற்கிணங்க சென்னையில் இருந்த 'கோபாட்' தலைவரின் உத்தரவின் பேரில் 'கேணல் சுருவாட்' தலைமையில் 2600 கூலிப்பட்டாளம் 1-8-1795-இல் திருகோணமலையை வந்தடைந்தது. ஏற்கனவே இங்கிலாந்தில் ஏற்பட்ட உடன்பாட்டிற்கு, இணங்க மறுத்தனர், ஒல்லாந்தின் இலங்கை ஆளுநர் 'வான் ஏஞ்சல்பிக்'கும் திருகோணமலையில் இருந்த ஒல்லாந்த தளபதி 'டிமோறனும்'! இருப்பினும் பிரித்தானியர் திருகோணமலையைத் தாக்கி 26-8-1895-இல் வெற்றி பெற்றனர்.

(தொடரும்)

'முகுந்தன்'

(உமாமகேசுவரன்)
தலைவர், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

இந்திரா காந்தியின் நன்கொடை!

இந்திராகாந்தி 11.11.82 அன்று தம் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பாலத்தீன விடுதலை இயக்கத்துக்கு அதன் தூதர் ''பய்சல் ஓவைடார்'' அவர்களிடம் ஓரிலக்கம் உருபாவுக்கான காசோலையை நன்கொடையாக வழங்கினுர். பாலத்தீனியர்களுக்கு உதவியளிக்கும் இதுபோன்ற நிகழ்ச்சிகளிற் கலந்து கொள்வதில் தாம் மகிழ்ச்சியடைவதாக அவர் கூறினுர்.

எப்படியிருக்கிறது?
நம் தமிழின மக்கள், ஈழத்தில், அதுவும் தம் சொந்த நிலத்தில் விடுதலை கேட்டுக்கொண்டு, சிங்கள ஆட்சியாளர்களிடம் அன்றுடம் சாகின்றுர்களே,
அவர்கள் விடுதலைக்கு உதவப்போவது யார்?

—இள. முதுபா.

"பாட்டாளி"
போலித் தலைவர்களே!
எச்சரிக்கை!

கண்ணில் தெரிவதை
எல்லாம்
காட்டிக் காட்டிக்
கேட்கின்ற குழந்தைகளாகிப்
போன தொழிலியக்கத்தின்
தலைவர்களே...
தோழர்களோடு சேர்ந்து
எங்கள் உரிமைகளை
எடுத்துக் கொள்வதைத்
தடுக்கவோ
காட்டிக்•கெடுக்கவோ
செய்யாமல்
விலகி நில்லுங்கள்—இல்லை.
நீங்கள்
வீசி எறியப்படுவீர்கள்.
எச்சரிக்கை !

— பூமகன்

அணுகுங்கள் !

மிகக் குறைந்த கட்டணத்தில், மிகவும் நேர்த்தியான முறையில், உடனுக்குடன் நெல்லை உமி நீக்கியும், மிளகாய், கேழ்வரகு, மஞ்சள் இவற்றைத் தூளாக அரைத்தும் கொடுக்கப்படும்.
மொத்த வாணிகமும் உண்டு.

அண்ணு அரிசி ஆலை

தேசுமுகிப் பேட்டை,
திருக்கழுக் குன்றம், செங்கை மா. வ,
உரிமையாளர் : கோ. வீரசாமி

உங்கள் மடல்...

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரைமறைவில் தென்மொழி படித்த இருள்நிலை மாறித் திரளானோர் தமிழ்நிலத்தைப் படிக்கின்ற திருப்பம் ஏற்பட்டிருக்கின்ற நன்னிலை விரும்பத்தக்கதே! மண் டைக்காடுகளை உருவாக்கும் மதங்கள், விழுப்புரங்களை உருவாக்கும் இனங்கள் மறைந்து, இனத்தாலும் மொழியாலும் ஒன்றுபட்ட ஏற்றமிகுகுமுகாயம் அமைத் தலை முகாமையாயக் கொண்டு, தூய தொண்டாற்றி வரும் உ. த. மு. க. வைக் காப்பது தமிழரின் தலையாய கடமையாகவும்.

தமிழினத்து உரிமைகளை முறையாய் நாட்டித்
தன்மான மறவர்க்குப் பயிற்சி யூட்டித்
தமிழ்மொழியின் நிலையுயர விழியைக் காட்டித்
தகும்நல்ல கருத்துகளை அளிக்கும் இன்பத்
தமிழ்நிலத்தின் பிறபபாலே தமிழர் பாரில்
தனித்தன்மை பெற்றிடுவார் என்ப தாலே
தமிழ்நிலமும் தருவோரும் குறளே போன்று
தமிழ்சுமந்து தலைநிமிர்ந்து வளர்க! வாழ்க!

—அ. நாயகனார், விருதுநகர்-1.

இதழ் மிகச் சிறப்பாக உள்ளது. தாங்கள் எதையும் திட்டவட்டமாக, கொள்கையோடு செய்வது பாராட் டக்கூடியது. எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற முறைப் படியில்லாமலும், உணர்ச்சி வயப்படாமலும், சட்ட திட்ட ஒழுங்கு முறையில் செய்வது சாலச் சிறந்தது.

—புலவர். தே. வே, சந்தானம், க. இ: அரூர்.

தமிழினம் சிறக்க வெளிவரும் 'தமிழ் நிலம்' தழைக்க என்னால் இயன்றதைச் செய்யக் காத்திருக்கின்றேன்.

— கோ. அண்ணாத்துரை, காவேரிப்பட்டணம்.

தமிழினப் பகைவர்களின் போர் வாளாகவும், தமிழைக் காக்க, கேடயமாகவும் விளங்கும் 'தமிழ் நிலம்' இதழ் வெளியீட்டிற்கு வாழ்த்திப் பெருமைப்படுகிறேன்.

— வரத, உளவழகன், திருக்கோவிலூர்.

சிங்கத் தமிழ்மகன் பாவலரேறால்
செழித்தது பாரெங்கள் தமிழ்நிலம்!
தங்கத் தமிழ்மொழி பாவலரேறால்
தழைத்தது பாரெங்கள் தமிழ்நிலம்!
பொங்கும் உணர்வுகள் பாய்ந்திட எங்கும்
புதுக்குரல் கொடுப்பது தமிழ்நிலம்!
எங்கும் புகழ்க்கொடி ஏற்றிப் போற்றிட
எழுந்தது பாரெங்கள் தமிழ்நிலம்!

அடிமைத் தளைகளை அடியோ டழிக்க
ஆர்த்துல கெழுந்தது தமிழ்நிலம்!
மடமைத் தனத்தினை மண்ணுடன் சாய்க்க
மலர்ந்தது காணெங்கள் தமிழ்நிலம்!
கூடிய பகையினைக் கொன்று குவித்திடக்
குவலயம் வந்தது தமிழ்நிலம்!
வாடிய பயிர்கள் வளங்களைப் பெற்றிட
வான்மழைத் தமிழ்நிலம் வாழ்கவே!

— பாவலர். நா. பாண்டுரங்கன், சென்னை-15.

தமிழ் நிலம்

உ. த. மு க. செய்தியிதழ்
கிழமை வெளியீடு (Weekly)

சிறப்பாசிரியர் :
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தனியிதழ் 0.65 காசு

ஆறு மாதக் கட்டணம் (26 கிழமைகள்) — 18.00 உருபா

ஓர் ஆண்டுக் கட்டணம் (52 கிழமைகள்) — 36.00 உருபா

ஐந்தாண்டுக் கட்டணம்: 175.00 உருபா
ஓரிதழ்க்கு 4 உருபா முன் பணம் கட்டக்கூடிய முகவர்கள் எழுதிக் கேட்க!

அல்லது ஓரிதழ்க்கு 50 காசு மேனிக் கணக் கிட்டு, 20 படிகளுக்கும் அதற்கு மேலும், எத்தனைப் படிகள் வேண்டுமாயினும், அப் படிகளுக்குரிய தொகையை முன் பணமாக விடுத்து இதழ்களைப் பெற்றுக் கொள்க.

அமைச்சர்
'தமிழ் நிலம்'
5, அருணாசலத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை—5.

சோழ மண்டிலத்தில் பாண்டியன் கல்வெட்டு

திருச்சி உறையூர்ச்சாலை வீதியிலுள்ள அருள்மிகு திருக்கோயிலில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இரண்டு கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை, பாண்டியன் கோமாறஞ்சடையன் என்னும் அரசனால் வெட்டுவிக்கப் பட்டவை எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவ்வரசனை இரண்டாம் வரகுணன் என்றுஞ் சிலர் அழைப்பர். கி. பி. 875ஆம் ஆண்டைச் சேர்ந்தனவாகக் கருதப்படும் இக்கல்வெட்டைகர். கலைக்கோவன் அவர்களும், தொல்பொருள் ஆய்வுத் துறையின் திருச்சி மாவட்டப் பதிவாளர் திரு. அப்துல்மசீது அவர்களும் கண்டுபிடித்து அறிவித்துள்ளனர். இக்கல்வெட்டுகள் சுண்ணாம்பு பூசப்பட்டு மறைந்து கிடந்தன. இக் கோயிலின் கருவறைச் சுவர்களிலுஞ் சில கல்வெட்டுகள் சிதைந்த நிலையிற் காணப்படுகின்றன. இவையும் ஆராயப்பட்டு வருகின்றன. சோழ மண்டிலத்திற் பாண்டியன் கல்வெட்டுகள் காணப்பெறுவது வியப்பளிப்பதாயுள்ளது.

செய்தி : கி. இளஞ்சேரல்
முதுபாண்டியன்
மின்பாறை.

●

இராமநாதபுரம் இராம(ன்) நாடு ஆகும் கொடுமை!

முகவைக்கு இராமநாதபுரம் என்ற பெயரும் வழக்கில் உள்ளது. இதனை ஆங்கிலர் 'இராம்நாட்' (Romnad) என்றனர். தமிழ் நாட்டரசு இராமநாதபுரம் என்று முழுமையாக எழுதப் பணித்து ஒரு சுற்றறிவிப்பும் செய்திருப்பதாக அறிகிறோம் இருந்தபோதிலும், முகவை எனத் தமிழ் ஆர்வலரும், இராமநாதபுரம் எனப் பலரும் எழுதி வரப் பார்க்கின்றோம்.

ஆனால், கிழக்கு முகவைக் காவல்துறையின் பேருந்து ஒன்றில் 'இராம(ன்)நாடு' என்றெழுதப்பட்டிருப்பதைப் பார்த்து வியப்புற்றனர். 'இராம்நாடு' ஆங்கிலப் பழக்கம் RAM NADU இராமன் நாடு எனப் பொருள்படுத்திக் காவல் துறை தனது 'இராம பக்தி' யை வெளிப்படுத்தியிருக்கிற பான்மை அழகு தான்!

காவல்துறையின் 'பக்தி இயக்கத்தின்' கண்டுபிடிப்பு தான் இராம(ன்) நாடு என்று கருதுகின்றோம்! உண்மையா என அறியவேண்டும்.

-கம்பனடிமை

அறிஞர்கள், தலைவர்கள் தமிழ்நிலத்தை வாழ்த்துகின்றனர்

✠ பேரா மு. ச. சிவம், க. மு. ஈரோடு-4,
பன்மொழிப் புலவர்

'தமிழ் நிலம்' இதழ் பிறப்பதறிந்து அளவிலா மகிழ்ச்சி. இவ்விதழ் தமிழ் மொழிக்கும் இன வளர்ச்சிக்கும் தமிழ்ப் பண்பாட்டு மறுமலர்ச்சிக்கும் பெருந் தொண்டு புரியும் என்று நம்புகின்றேன். 'தமிழ் நிலம்' நீடுவாழ்க என வாழ்த்துகிறேன்.

✠ பாவலர். கா. வேழவேந்தன், க.இ; ச.இ. சென்னை-4
முன்னாள் அமைச்சர்.

'தமிழ் நிலம்' கிழமை ஏடு வெளிவருவதறிந்து மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன். தனித் தமிழியக்கமே உயிர் மூச்சாய், சீரிய இலக்குடன் தொடங்கப் பெறும் 'தமிழ் நிலம்' தொய்யாமல், துவளாமல், உயர்ந் தோங்கித் தமிழ்ச் சோலைக்கு உயிரூட்டம் தர நானும் பணிவுடன் நெஞ்சார வாழ்த்திப் போற்றுகின்றேன். வாழிய தமிழ் நிலம்! வெல்க தங்கள் குறிக்கோள்!

✠ முனைவர். சாலை. இளந்திரையன் புதுதில்லி-5.
தில்லிப் பல்கலைக் கழகம்.

'தமிழ் நிலம்' வெளிவருவது அறிந்து மகிழ்ந்தோம். முதல் இதழை வாங்கிப் பார்த்தோம். இதழ் சிறப் பாகவே அமைந்துள்ளது. பாராட்டுகள்,

✠ பர். பொற்கோ சென்னை-18.
சென்னைப் பல்கலைக் கழகம்.

'தமிழ் நிலம்' இதழ் தமிழ் மக்களுக்கு எழுச்சியும் வலிமையும் அளித்துத் தானும் பலிவும் பொலிவும் பெற்றுச் சிறப்பாக இயங்க வேண்டுமென்று விரும்பு வேன். என் ஒத்துழைப்புகளை மகிழ்வோடு வழங்கு வேன்.

'தமிழ் நிலம் துலக்கிட வாரீர்'

புலவர். நாவை - சிவம் இல. இ ; கல். இ—
செயலர், மணப்பாறை வட்ட. உ. த, மு. க. திருச்சி மா.வ.

உலகத் தமிழின முன்னேற்றம் பேசிடும்
உண்மைக் கழகத்தைப் பேணவே,—அட!
இலகிடும் செந்நிற வெண்மைக கொடியினால்
எங்கும் மலர்ச்சிதான் காணவே,
தோன்றும் 'தமிழ் நிலம்' பாரீர்!—இதைத்
துலக்கி மகிழ்ந்திட வாரீர்!

முன்னைச் செழும்பொருள் அன்னைத் தமிழ்மொழி
மூவா நலமெலாம் உய்யவே,—அட!
கன்னல் இலக்கியம் கட்டுரை ஆய்வுகள்
காணும் கலைநலம் செய்யவே,
மலரும் தமிழ்நிலம் பாரீர்!—இதன்
மாட்சிக் குதவிட வாரீர்!

நண்ணும் அறிவியல் நாடிய வாழ்வியல்
நல்ல வரசியல் தோன்றவே,—அட!
எண்ண இனித்திடும் இன்றமிழ்ப் பண்புகள்
எல்லார் மனத்திலும் ஊன்றவே,
புலரும் தமிழ்நிலம் பாரீர்!—இதன்
பொலிவிற் கரண்செய வாரீர்!

வெடிப்புறு மக்களின் வேற்றுமை மாற்றியே
வெல்லும் பொதுமைதான் பூக்கவே—அட!
துடிப்பும் எழுச்சியும் தோளில் நிறுத்தியே
தொல்தமிழ் தன்னிலம் மீட்கவே,
பிறங்கும் தமிழ்நிலம் பாரீர்!—இதன்
பெற்றிச் கணிசெய வாரீர்!

அன்பர்கள் கவனிக்க...

கழக முதல்வர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல் வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள்.

— அமைச்சர்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

உலகில் பரவிய தமிழினம்...

அந்த உணர்ச்சி இன்றை வரை தமிழனத்திலே மறைந்து போகவில்லை! அதற்கு மிக அண்மையிலே ஓர் எடுத்துக்காட்டை நான் உங்களுக்குச் சொல்லுவேன். தமிழ் ஈழத்திற்காகப் போராடிக் கொண்டிருப்பவர்கள் 'விடுதலைப் புலிகள்'. அந்த விடுதலைப் புலிகள் எந்த வகையான ஓர் எண்ணத்தோடும், எந்த வகையான ஓர் ஆசையோடும், பாசத்தோடும், பற்றோடும் அவர்கள் செயல்படுவதில்லை. உண்மையாகத் தங்களை முழுமையாக நாட்டுக்காக ஒப்படைத்துக் கொண்டவர்கள். காலையிலிருந்து மாலை வரை எப்படி இயங்க வேண்டும் என்றெல்லாம் அவர்கள் சட்டதிட்டங்களிலே வரையறுக்கப்பெற்றிருக்கின்றது. நீங்கள் இதை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். காலையிலே அவர்கள் உண்ணுவதே கிடையாது. ஒருநாளைக்கு இரண்டு வேளை உணவுதான் அவர்கள் உண்ணுவது! அவ்வளவு கட்டுக்கோப்பாக அமைந்த ஒரு பெரிய பேரியக்கம் என்று சொல்ல முடியாமற் போனாலும், உண்மையாக வலிவுள்ள ஓர் இயக்கத்திலே என்ன வீழ்ச்சி ஏற்பட்டது? உள் வீழ்ச்சி தான் ஏற்பட்டது! அந்த உள் வீழ்ச்சி ஏற்பட்ட பின்னாலே அந்த இயக்கம் கட்டுப்படுத்தப்படுகிறது. புறநிலையிலே எத்தனைக் கட்டுப்பாடுகள் செய்ய முடியுமோ அத்தனைக் கட்டுப்பாடுகளும் செய்யப்படுகின்றன. இவ்வளவு உண்மையான விடுதலை நோக்கம் உடைய, உண்மையான வீரர்களுக்குக்கூட உள் வீழ்ச்சி ஏற்படுகிறது தமிழினத்திலே என்று சொன்னால் வேறு எந்த இனத்திலும் அதைப் பார்க்க முடியாது. அசாமிலே தொடர்ந்த போராட்டம் நடந்து கொண்டேயிருக்கிறது. அங்கே ஏதாவது ஒரு விழ்ச்சி ஏற்பட்டதா? பொதுமக்கள் கூட அந்தப் போராட்டத்திலே பங்கு கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்த உயிரழிவுகள்; தொடர்ந்த பொருள் தடைகள்; முன்னேற்றத் தடைகள்; வாழ்க்கைத் துன்பங்கள்! அத்தனையிருந்தும்கூட அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஓர் இனமோ அல்லது ஒரு நாடோ முதலில் உரிமைக்காகப் போராடித் தங்களுடைய நிலைகளைச் சாப்படுத்திக் கொள்ளவேண்டும். அதற்குப் பின்னால்தான், அதற்கு வாழ்க்கை என்கின்ற ஒரு நிலை சரியாக அமைய முடியும். எடுத்த எடுப்பிலேயே கூட இந்த நாட்டிலே பலவகையான விளைவுகள் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகப் பலகோணங்களிலிருந்தும் இந்த நாட்டிலே இயக்கங்கள் தோன்றுகின்றன! அதிலே ஒரு கோணம், பொதுவுடைமை இயக்கம். பொதுவுடைமை இயக்கம் என்பது ஏன் தோன்றியது; எதற்காகத் தோன்றியது; எதற்காக இப்பொழுது இருந்து கொண்டு அது வலுப்பெறாமல் இருக்கிறது என்பதை நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும். பொதுவுடைமைக் கொள்கை நமக்கெல்லாம் தலையாய கொள்கை! மிகப் பாராட்டக்கூடிய கொள்கை! வரவேற்கக்கூடிய கொள்கை! இந்தவுலகம் இறுதியிலே கடைபிடிக்கப்படக்கூடிய கொள்கை, பொதுவுடைமைக் கொள்கை தான்! ஆனால், அந்தக் கொள்கையை நடத்துபவர்கள் யார்? செயலபடுத்துபவர்கள் யார்? மக்களுடைய பகைவர்கள்! இந்த நாட்டைப் பல துண்டுகளாகச் செய்து கொண்டு, இந்த மக்களைப் பல கூறுகளாகப் பிரித்துக் கொண்டிருப்பவர்கள் தாம் இதைச் செயல்படுத்துகிறார்கள். அதற்கு உங்களுக்கு மிக அண்மையிலே ஓர் எடுத்துக்காட்டை நீங்கள் தெரிந்திருக்கலாம். உருசியாவிலிருந்து, இந்திரா காந்திக்கு ஓர் எச்சரிக்கை வருகின்றது! உருசியா என்பது தான் உண்மையான பொதுவுடைமை நாடு சீனா என்பது ஒரு வகையான பொதுவுடைமை நாடு. கொஞ்சம் கருத்து வேறுபாடு கொண்ட ஒரு நிலை இருந்தாலுங்கூட. அந்தத் தோற்றம் அந்த மார்க்சியம் செயலாக மலர்ந்த ஓர் இடம், அந்த உருசிய நாடு. அங்கிருந்து வருகிறது ஓர் எச்சரிக்கை! 'உங்கள் நாட்டிலே பிரிவினை ஆற்றல்களை, பிரிவினைக்காரர்களை அதிகமாக வளர்த்து விடாதீர்கள்! அவற்றை நீங்கள் எச்சரிக்கையாக ஒடுக்கவேண்டும். எவ்வளவு, ஓர் உயர்ந்த எச்சரிக்கை மக்கள் உரிமையைக் கட்டிக்காக்கின்ற ஒரு நாட்டிலிருந்து இந்த நாட்டிற்குக் கிடைக்கின்றது என்று சொன்னால், பொதுவுடைமையை அவர்கள் எந்தக்கண்ணோட்டத்தோடு பார்க்கிறார்கள் என்பதை, நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த நாட்டிலே பொதுவுடைமை என்பது, ஓர் இனத்தின் அடிப்படையிலே உருவாக்கப்பட்டு வருகின்றது. என்வே தான், இந்த நாட்டிலே அது வெற்றி பெறவில்லை! மக்களுக்காக அந்த இயக்கம் இருக்குமானால், அது மக்கள் நலத்தைக் கருதுமானால், மக்களுக்குப் பகையாக உள்ள எத்தனைக் கூறுகள் இருக்கின்றனவோ, அத்தனைக் கூறுகளையும் அவர்கள் தீர்ப்பதற்கான, அழிப்பதற்கான முயற்சியிலே அவர்கள் ஈடுபட வேண்டும். தந்தை பெரியார் அவர்கள் அதைத் தான் சொன்னார்கள். முதலிலே இந்த இனம் தாழ்த்தப்பட்ட இனமாக, வீழ்த்தப்பட்ட இனமாக அடிமைப்படுத்தப்பட்ட இனமாக, ஓரினத்துக்கு நேரக்கூடாத அத்தனை அழிவுகளும் ஏற்பட்ட இனமாக இந்த இனம் இருக்கிறது. இந்த இனத்தினுடைய முன்னேற்றத்தைத் தான் நாம் முதலிலே கருத வேண்டும். பொருளியல் விளைவு, பொருளியல் மாற்றங்கள், அதற்கு அடிப்படையிலே, அதற்கு அடுத்த படியிலே இயங்க வேண்டிய ஒரு தேவை; அந்தத் தேவையை நாம் செய்வோம். இல்லையென்று சொல்லவில்லை! ஆனால் ஒருவன் மிகவுயர்ந்த பிறப்பினன்; இன்னொருவன் மிகத்தாழ்ந்த பிறப்பினன் என்கின்ற வேறுபாடான தன்மையை இந்த நாட்டிலே நிலைநாட்டிக் கொண்டிருக்கின்றன மதங்கள். அந்த மதங்களினுடைய வேர்கள் அறுகின்ற வரை, அந்த மதங்களை மக்கள் ஒதுக்கின்றவரை மக்கள் எல்லாரும் சமமானவர்கள், அவர்களுடைய சமமான உழைப்பு எல்லாருக்கும் அந்த உழைப்பும் உழைப்பின் பயனும் பகிரப்படும் வரை நமக்கு இந்த முயற்சி தான். பொது இந்த உயர்ந்த நோக்கத்திற்கு அவர்கள் வருவதற்கு முன்னால், அவர்கள் பிறவியிலே சமமானவர்கள் என்கின்ற உணர்ச்சி அவர்களுக்குத் தோன்ற வேண்டும். இந்த உணர்வு யாருக்காவது இருக்கிறதா? ஒவ்வொருவரும், உயர்ந்த சாதியார் என்பவர்களைப் போலவே, அதற்கு அடுத்த சாதியார்களும் அதற்கு அதற்கு அடுத்த சாதியாரைத் தாழ்த்திக் கொண்டிருக்கின்ற நிலையை இன்றைக்கு நாம் பார்க்கின்றோம்.

தமிழ் நாட்டிலே, தமிழ் மொழியாலே, ஓர் இணைவு ஏற்பட முடியாத நிலையைத் தொடக்கத்திலேயே செய்துவிட்டார்கள். மொழியை அழித்துவிட்டார்கள்! மொழியினுடைய பெருமையினாலே மொழியினுடைய ஓர் உணர்வினாலே, ஒரே இனமாகச் செய்கின்ற ஒரு முயற்சி தொடக்கத்திலேயே, அழிக்கப்பட்டு விட்டது.

தமிழ் மொழி பேசுகிறவர்கள் அத்தனைப் பேரும் தமிழர்கள். தமிழ் இனத்தவர்கள் என்று சொல்லுகின்ற ஒரு வாய்ப்பு இல்லாமலேயே போய்விட்டது. நாம் தமிழ் மொழியை உண்மையாகப் பேசவில்லை; உண்மையாக மதிக்கவில்லை! எனவே தான் வேற்று மொழிகள் இந்த நாட்டிலே வந்து ஆளுமை செய்கின்றன! இன்றைக்கும் செய்து கொண்டிருக்கின்றன! ஒரு பெரிய ஆளுமையை நம்மால் எதிர்க்க முடியவில்லை! தொலைக் காட்சியிலும் வானொலியிலும் இந்தி எதிர்ப்பு செய்து கொண்டிருக்கிறோம்! இன்னமும் தீரவில்லை! இந்தி எதிர்ப்பு என்பது தொடர்ந்து கடந்த நாற்பது ஆண்டுகளாக, நாற்பத்தைந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து நடந்து கொண்டு வருகின்ற ஒரு போராட்டம். ஓர் இனத்தின் மேல் தாக்க வருகின்ற ஒரு மொழித் தாக்கத்தை நாம் தடுத்து நிறுத்துவதற்குக்கூட நம்மால் செய்ய முடியவில்லை என்று சொன்னால், அந்த இனத்தின் உள்முகத் தாக்கங்களை, பொருளியல் தாக்கங்களை அரசியல் தாக்கங்களை நம்மால் தடுத்துவிட முடியுமா? எனவேதான், நாம் அடிப்படையிலே ஓர் உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும். உண்மையாகவே இந்த இனம் முன்னேற வேண்டும் என்கின்ற உணர்வு உடையவர்கள் ஒன்றுசேர வேண்டும் மற்றவர்கள் சேர்ந்தாலும் ஒன்றுதான்; சேரவில்லை ஆனாலும் நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால், அறிவுள்ளவர்கள், சிந்தனையாற்றல் உள்ளவர்கள், மக்கள் ஈடேற்ற வேண்டும் என்ற நோக்கம் உடையவர்கள் ஒன்றாக இணைய வேண்டும். அப்படி இணைவதற்காகத் தொடங்கிய அந்தக் கழகம்தான் உலகத் தமிழின முன்னேற்றக்கழகம்! அதிலே எந்த வகையான ஒருதனிப்பட்ட நலனுக்கோ, குறிக்கோளுக்கோ, தொடங்கப் பெறவில்லை! அதை நீங்கள் காலப்போக்கிலே உணர்ந்துகூட அதற்குப் பின்னால் உங்களுடைய ஆதரவைக் கூடத் தரலாம்! அது உடனடியாகத் தரவேண்டும் என்கின்ற தேவையில்லை! எந்த நிலையிலும், எல்லாரும் தங்களை உலகத் தமிழினத்தின் ஒரு சிறு கூறாகக் கருதிக் கொள்ளுகின்ற மனப்பாங்கு ஒன்று வரவேண்டும். மிகச் சிறிய சாதி அமைப்புக்குள்ளே நம்மைக் கட்டுவித்துக் கொள்ளக்கூடாது!

(தொடரும்)

ஆரியப்பார்ப்பனர் திருந்தினர் என்றே...
ஆருனக்குரைத்தனர், அவர் குணம் ஒன்றே!

'அவாள்' சங்கத் தலைவர்கள் தாங்களும் தமிழர்களே என்கின்றனர், ஆனால் ''அவாள்' திருமண அழைப்பிதழைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லையே. சான்றுக்கு அண்மையில் (12-11-82இல்) நமக்கு வந்த அவர்களின் திருமண அழைப்பு இது.

ஸ்ரீராமஜெயம்

ஸ்ரீமதே லக்ஷ்மீ நிருஸிம்ஹ பரப்ரம்ஹணே நம. ஸ்ரீமதே ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ வேதாந்த தேசிகய தீந்த்ர ஹோதேசிகாய நம:

விவாஹ சுப முஹூர்த்தப் பத்திரிகை

ஸ்ரீமத் வேத மார்க்கப் பிரதிஷ்டாபனாசார்ய உபய வேதாந்தசார்யராய் எழுந்தருளியிருக்கும்.................... ஸ்வாமி ஸன்னதியில் அடியேன்.................... .... அனந்தமான தெண்டம் ஸமர்ப்பித்த விக்ஞாபனம் உபய குசலோபரி.

துந்துபி..................7½க்கு மேல் 10க்குள் கனிஷ்ட குமாரன் சிரஞ்சிவிக்கு......கனிஷ்ட குமாரத்தி சௌபாக்ய வதியை.........பாணிக்ரஹணம் செய்து கொள்வதாய்...... ஷி சுபமுகூர்த்தம்.........மண்டபத்தில் நடக்கிறபடியால் தாங்கள் ஸஹ குடும்ப ஸமேதராய் முன்னதாகவே......... பிரார்த்திக்கிறேன்.

வாசக தோஷ: க்ஷந்தவ்ய:
தாஸன்
............................மேற்படியார்.

○ தமிழர்களுக்கு தம்மொழியுணர்வு என்று தான் வருமோ!

—செய்தி. தொழிலாளி

தென்மொழி, தமிழ்ச்சிட்டு
இதழ்கள் காலத்தாழ்த்தம்!

ஆசிரியர் உடல்நலமின்மை, 'தமிழ் நிலம்' வெளியீட்டு அழுத்தம் காரணமாக நவம்பர் மாதத் தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்கள். திசம்பர் இதழுடன் வரும். அன்பர்கள் பொறுத்துக் கொள்க.

அமைச்சர்,
தென்மொழி.

உ. த. மு. க.வின் உயர்ந்த கொள்கைகள்:

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்.
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல், அணுகுமுறை.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவுஎண். TN/MS(C)/657

அனுப்புதல்:
'தமிழ் நிலம்'
5, அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—5.

உறுப்பினர்.
ஆண்டு கட்டணம் ரூ. 36/-
அரையாண்டு கட்டணம் ரூ. 18/-

பெறுநர். நூல் அஞ்சல்

திரு / திருவாட்டி.

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார், அச்சிடுவோர்: 'தென்மொழி' அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.